உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௧௪.] நள ௵ ஆவணி௴ [பகுதி-௧௦.
Vol. XIV. August—September, 1916. No. 10.

## ஒரு பொதுக்கூட்டத்தின் தீர்மானம்.

1916-௵ அக்டோபர்௴ 22௳ ஞாயிற்றுக்கிழமை தஞ்சைக் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தில் அறிஞர்பலர்கூடிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் சவரிராயன் M. R. A. S. அவர்கள் அக்கிராசனமமர, அப்பொழுது நடுத்தரப்பரீட்சைக்கு (Intermediate Examination) த்தமிழ்வியாசம் எழுதுமுறையிற் பேச்சுவழக்குச்சொற்களைக் கலந்தெழுதும் ஓர் அளவினைத்தீர்மானிப்பதற்கென்று சென்னைச் சர்வகலாசங்கத்தாரின் ஆலோசனைச்சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காரிய ஆலோசனைச்சபையாரின் தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இவ்வாராய்ச்சியும் இத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி கனம் T. V. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L., அவர்களால் தொடங்கப்பட்டு ஐந்துமணிநேரத்தின்மேலாக நடைபெற்றது. சர்வகலாசங்கத்தின்பதிவு அதிகாரியால், கலாசாலைகளுக்குவிடுக்கப்பட்ட சுற்றுக்கடிதத்திலடங்கியபல ஆதரவுகளும் ஆழ்ந்து ஆராயப்பட்டுப் பின்கண்ட தீர்மானங்கள் எல்லாராலும் ஒருமையாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

1. தமிழ்வியாசமெழுதுமுறையிற் பேச்சுவழக்குச்சொற்களின் அளவைத் தீர்மானிக்க ஏற்பட்ட காரியஆலோசனைச்சபையானது போதுமான பிரதிநிதிகளுடன்கூடியதல்லாததுபற்றியும், யாதொரு தீர்மானமும்கொள்வதற்குமுன், கலாசாலைப்பண்டிதர்களும், தமிழ்ச் சங்கங்களும், பிரசித்திபெற்றதமிழறிஞர்களும், ஆசிரியர்களும் கலந்து ஆலோசிக்கப்படாததுபற்றியும், இக்கூட்டமானது மிகவும் விசனிக்கின்றது.

2. தமிழ்வியாசமெழுதுவதற்குப் பேச்சுத்தமிழில் ஓர் அளவு ஏற்படுத்திக்கொள்ளலாமெனக் கருதியமாத்திரத்திற் சர்வகலாசங்கத்தின் ஆலோசனைச்சபையார்தொடக்கத்திலேயே பிசகிவிட்டனரென்றும், இதுவரையிலும் கொண்டுவந்த ஓர் எழுத்துநடையைவிட்டுப்

*

புதியதோர்மார்க்கம்புகுந்தது தமிழ்மொழியில் உயர்தரமான செவ்விய நடையைக்கற்றறிந்துகொள்வதற்கு அழிவைத்தேடித்தருகிறதென்றும் இக்கூட்டம் கருதுகின்றது.

3. மேலேகூறப்பட்ட காரியஆலோசனைச்சபையாரின் இரண்டாவதுதீர்மானத்தை இந்தக்கூட்டம் சிறிதும் ஒப்புக்கொள்ளாததுடன் இப்பொழுதுள்ள தமிழ் நெடுங்கணக்கை ஒருவிதத்திலும் பின்னப்படுத்தக்கூடாதென்றும், பிறமொழிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் வார்த்தைகள் தமிழ்மொழியின் ஒலிஇலக்கணத்திற்குப்பொருந்தியனவாகத்தோன்றும்படியே செய்யப்படவேண்டுமென்றும், பிறமொழி எழுத்துக்களின் உச்சாரணத்தை ஏற்றுநிற்கப் புதியஎழுத்துக்களைக் கற்பித்துக்கொள்ளச்செய்யும் முயற்சியானது தமிழ்மொழியின்ஒப்பற்ற விசேஷநிலையைக்கெடுத்து அதன் இலக்கணத்தின்தோரணையழகையும் சின்னபின்னமாக்குமென்றும் தீர்மானிக்கிறது.

4. இலக்கணத்தாலும், வழக்காலும் ஒப்புக்கொள்ளப்படாத காரணத்தால், மொழிகள்புணரும்போது சந்திவிதிகளைக்கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் பாதகமில்லையெனநெகிழவிடுவதை இந்தக்கூட்டமானது உறுதியாகமறுத்துநிற்கின்றது.

5. காரிய ஆலோசனைச்சபையாரின் அறிக்கையின் இரண்டாவது அநுபந்தத்தில் உதாரணமாகக்காட்டப்பட்ட 'மரத்தைகண்டான்' என்பதுபோன்றவற்றிற் சந்திவிதியை இஷ்டப்படிதழுவிக்கொள்வது இயற்கைக்குவிரோதமானதென்றும், 'மரத்தைக்கண்டான்' எனக் ககரவொற்று இரட்டித்தலைவேண்டுகின்ற சாதாரணசெவியின்ப உச்சரிப்பிலக்கணத்திற்குமாறாகஉள்ளதென்றும் இந்தக்கூட்டமானது அபிப்ராயப்படுகிறது.

6. இரண்டாவதுஅநுபந்தத்தில் மூன்றாவதுவிஷயமாக விலக்கப்பட்டசந்திகளுக்குக்கொடுக்கப்பட்ட உதாரணங்களுமவைகொடுக்கப்பட்ட உத்தேசமும் தெளிவில்லனவாயும் அறியக்கூடாதனவாயுமிருக்கின்றன.

இத்தீர்மானங்கள் சர்வகலாசங்கத்தின் பதிவுஅதிகாரியாருக்குத் தெரிவித்துக்கொள்ளப்பட்டன.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை கரந்தட்டாங்குடி,
1916-ஆ நவம்பர்மீ 6வ

தங்கள் உண்மையுள்ள,
ஆ. ச. ஆறுமுகம்பிள்ளை,
உதவிக்காரியதரிசி.

ஸ்ரீ:

# இப்பொழுதுகிடைத்த வளையாபதிச்செய்யுண்முதலியன.

பண்டைக்காலத்து அருந்தமிழிற் பெரும்புலவர்களாற்செய்யப்பட்ட நூல்களுட் பல இற்றைக்குப் பன்னெடுநாண்முன்பே இறந்தும் சிதைந்தும்போயினவென்று சிலப்பதிகாரமுதலிய நூல்களாலும் அவற்றின் உரைகளாலும் தெரியவருகிறது. எஞ்சியவற்றில் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ உ. வே. **சாமிநாதையரவர்களாலும்** பிறராலும் பல அருந்தமிழ்நூல்கள் வெளியிடப்பட்டன. இறந்தவைபோக இறக்குந்தருவாயிலிருந்த தமிழ்நூல்களைத் தம் அரும்பெருமுயற்சியால் வெளியிட் டுயிர்பெற்றெழச்செய்த ஐயரவர்கள்முதலியோர்க்குத் தமிழுலகம் பல்லாற்றானும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. இன்னும் வளையாபதி, முத்தொள்ளாயிரம், குண்டலகேசி, பரிபாடல் முதலிய சில நூல்களிலிருந்து புறத்திரட்டிலும், பழந்தமிழ்நூலுரைகளிலும் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சிற்சிலசெய்யுள்களே இப்பொழுது நமக்கு அகப்படக்கூடியவையாயுள்ளன. இவற்றில் வளையாபதிச்செய்யுள்களையும், முத்தொள்ளாயிரச் செய்யுள்களையும் முன்பு செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்த ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீ உ. வே. **ரா. இராகவையங்காரவர்கள்** அப்போது கிடைத்தமட்டில் தொகுத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிட்டுள்ளார்கள். அது தமிழர்களால் மிகவும் பாராட்டற்பாலதே. இன்னோரன்னசெய்யுள்கள் இன்னும் அகப்படாவோவென யான் புறத்திரட்டுப்பிரதிகளை ஆராய்ந்துவருகையில், பழமொழியாராய்ச்சிக்குபயோகப்படும்படி, தமிழபிமானியும், செந்தமிழ்க்கு நெடுநாளாய் விஷயதானம் புரிந்துவருபவருமான திருவாரூர் இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகரவர்களாற் கொடுக்கப்பட்டிருந்த புறத்திரட்டுப்பிரதியிற் **போதுமகளிர்** என்னும் அதிகாரத்தின்கீழ்ச் சில **வளையா**பதிச் செய்யுள்களும், **நகர்** என்னுமதிகாரத்தின்கீழ்ச் சில **முத்தொள்ளா**யிரச் செய்யுள்களும் அச்சில்வாராதனவாய்க் காணப்பட்டன. அவற்றுள், வளையாபதிச்செய்யுள்களிற், பல வுவமானங்களாற் பொதுமகளிரியல்பு நன்கு விளக்கப்பட்டுள்ளது. இவை ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று புறத்திரட்டுப்பிரதியிற்கண்டவாறே கீழேபதிப்பிக்கப்பட்டுள்ளன. அதில் ஏதேனும் பிழைகளிருப்பின் அறிஞர்கள் திருத்திக்

கொள்ளுமாறுவேண்டுகிறேன். இதுபோல் இன்னும் பலபிரதிகளிலும் செய்யுள்கள் அகப்படக்கூடுமென்று தோன்றுவதால், புதைந்துகிடக்கும் பழந்தமிழ்ச்செய்யுள்கள்பலவும் ஒருங்குசேர்ந்து பயன்படுமாறு அறிஞர்கள் தம்மிடத்துள்ள பிரதிகளை ஆராய்ந்து தாங்கண்டசெய்யுள்களைத் தொகுத்துச் செந்தமிழ்வாயிலாய் வெளியிடுமாறு வேண்டிக் கொள்கிறேன். சோமசுந்தரதேசிகரவர்கள் புறத்திரட்டிற்கண்டவளையாபதிச்செய்யுள்கள் வருமாறு:—

1. யாறொடியாழ்ணொலிகோனிலவார்கொடிப்
பாறொடுபத்தினிமாபோலொழுகென்று
கூறினள்கூத்திமுதிர்ந்தாண்மகட்கவை
வேறொரிடத்துவெளிப்படநன்றாய்.

2. நாய்குரங்குஞ்சிறைவண்டினம்போல்கென்று
பாயிரமன்றிப்பயிற்றிமொழிந்தனண்
மேவரும்வான்பொருடந்துநின்றோணம்பி
யாவரொருவரடைந்தவரெல்லாம்.

3. *வாரிபெருகப்பெருகியகாதலை
வாரிசுருங்கச்சுருங்கிவிடுதலின்
மாரிபெருகப்பெருகியறவறும்
வார்புனலாற்றின்வகையும்புரைப.

4. எங்ஙனமாதிப்பொருளப்பொருட்
கங்ஙனமாகியவன்பினராதலி
னெங்ஙனம்பட்டனன்பாண்மகன்பாண்மகற்
கங்ஙனமாகியயாழும்புரைப.

---

* இப்பாட்டின்கருத்து, நாலடியிலும்,

"புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும்
விதுப்புறநாடின்வேறல்ல—புதுப்புனலும்
மாரியறவேயறுமேயவரன்பும்
வாரியறவேயறும்"

என்னும்பாட்டில் வந்துள்ளது. (37-ம் அதிகாரம் பன்னெறி செய்யுள்—10.

5. கரணம்பலசெய்துகைகற்றவர்கட்
*கரணமெனுமில்லாறறிறகறது
திரணியுபாயத்திற்றிண்பொருள்கோடற்
கரணிஞெலிகோலமைவரவொப்ப.

6. நாடொறுநாடொறுநந்தியகாதலை
நாடொறுநாடொறுநையவொழுகலி
னாடொறுநாடொறுநந்தியுயர்வெய்தி
நாடொறுந்தேயுநகைமதியொப்ப.

7. தங்கட்பிறந்தகழியன்பினார்களை
வன்கண்மைசெய்துவழியவிடுதலி
னின்பொருளேற்றியெழுநின்றவர்ணிகர்க்
கங்கட்பரப்பகத்தாழ்கலமொப்ப.

8. ஒத்தபொருளானுறுதிசெய்வார்களை
யெத்திறத்தானும்வழிபட்டொழுகலிற்
பைத்தரவல்குற்பொற்பாவையினல்லவர்
பத்தினிப்பெண்டிர்படியும்புரைப.

9. வீபொருளானையகன்றுபிறனுமோர்
மாபொருளான்பக்கமாணநயத்தலின்
மேய்புலம்புல்லறமற்றோர்புலம்புகு
மாவும்புரைபமலரன்னகண்ணார்.†

10. நாயும்போல்வர்பல்லெச்சிலுநக்கலாற்
றீயும்போல்வர்செய்நன்றிசிதைத்தலா
னோயும்போல்வர்நுகர்தற்கருமையால்
வீயும்போல்வரிவ்வேனெடுங்கண்ணினார்.†

11. நொய்ப்பொருளானை‡நுகர்ந்திட்டுவான்பொரு
ணன்குடையானைநயந்தனர்கோடலின்
வம்பிளமென்முலைவாணெடுங்கண்ணவர்
கொம்பிடைவாழுங்குரங்கும்புரைப.†

---

* இவ்வடியின்சொரூபம் விளங்கவில்லை.

† இவ்வடையாளமிடப்பட்ட மூன்றுசெய்யுளும் பன்னூற்றிரட்டிலும் வரைவின்மகளிர் என்னும் அதிகாரத்தில் வளையாபதிச்செய்யுளாகக் காட்டப்பட்டுள்ளன.

‡ 'துண்பொருளானை'யென்பது பன்னூற்றிரட்டுப்பாடம்.

12. முருக்கலர்போற்சிவந்தொள்ளியரேனும்
பருக்காட்டிலவலர்பக்கநினையா
ரருப்பிளமென்முலையஞ்சொலவர்தாம்
வரிச்சிறைவண்டின்வகையும்புரைப.

13. மக்கட்பயந்துமனையறமாற்றுதல்
தக்கதறிந்தார்தலைமைக்குணமெனப்
பைத்தரவல்குற்படிற்றுரையாரொடு
துய்த்துக்கழிப்பதுதோற்றமொன்றின்றே.

மேலேகண்ட பதின்மூன்றுசெய்யுள்களும் சங்கத்திலுள்ள புறத்திரட்டுப்பிரதியில் இல்லாதவை. இனி முத்தொள்ளாயிரச்செய்யுள்கள் வருமாறு.

1. களிகள்களிகட்குநீட்டத்தங்கையாற்
களிகள்விதிர்த்திட்டசெங்கட்—டுளிகலந்
தோங்கெழில்யானைமிதிப்பச்சேருயிற்றெம்
பூம்புனல்வஞ்சியகம்.

2. மாலைவிலைபகர்வார்கிள்ளிக்களைந்தபூச்
சாலமிகுவதோர்தன்மைத்தாய்க்—காலையே
விற்பயில்வானகம்போலுமேவேல்வளவன்
பொற்பாருறந்தையகம்.

3. மைந்தரொடேடிமகளிர்திமிர்ந்திட்ட
குங்குமவீர்ஞ்சாந்தின்சேறிழுக்கி—யெங்குந்
தடுமாறலாகியதன்மைத்தேதென்ன
னெடுமாடக்கூடலகம்.

இம்மூன்றுபாடல்களும் சங்கத்திலுள்ள புறத்திரட்டுப்பிரதியிலும் நகர் என்னுமதிகாரத்தில் உள்ளன. ஆயினும் நூலின்பெயர் குறிக்கப்படாதுவிடப்பட்டிருக்கிறது.

இராமாநுஜய்யங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

# ஸ்ரீரங்கத்துச்சாசனங்கள்.

அடியில் ஸ்ரீரங்கத்துச்சாஸனங்களி லிரண்டு பதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது, ஸ்ரீவைஷ்ணவர்களால் ரங்கநாதஸ்வாமியுடைய திருவிடையாட்டநிலங்களின் குத்தகைவிஷயமாய்ச்செய்தவியவஸ்தையைப்பற்றியது. மாறவன்மரான சுந்தரபாண்டியன்காலத்தது; கி. பி. 1225வதுவருஷம், மார்ச்சுமாதம் 28உ வெள்ளிக்கிழமைதினம் மேற்கூறியவியவஸ்தைசெய்யப்பட்டதென்று சாஸனத்திற்கொடுத்திருக்கும் பஞ்சாங்கவிவரங்களால் ஏற்படுகிறது. திருவரங்கத்தெம்பெருமானார் பூஸ்திதிகளைக் குத்தகையெடுத்தபேர்கள் அவ்வந்நிலங்களை அபகரித்துக்கொண்டு பற்பல அநியாயங்கள்செய்துவந்தபடியாற் பூசைமுதலியவைகள் குன்றுதலடைந்துபோயின. அப்பொழுது, அந்நாட்டை ஆண்டுவந்தவனோ, மற்றெவ்விதத்திலானும் ஸ்ரீரங்கத்துக்கோயில்விஷயத்தில் அநுராகமுள்ள இராஜசாமந்தனோ ஒருவன் அநியாயஞ்செய்துவந்தவர்களை நிராகரித்து, நிலங்களையெல்லாம் கோவிலாட்சிக்குவசப்படுத்திக்கொடுத்துப் பூஜை, திருநாட்கள்முதலியவைகள் மறுபடியும் விமரிசையாய்நடக்கும்படி செய்வித்தான். இப்படி இவன் செய்யத்தூண்டியபேர்களில் முக்கியமானவர்கள், ஜீயர்நாராயணதாசர், பெரியதிருப்பதிப்பாகவதநம்பிமார்கள், திருவரங்கத்துச்சபையார்முதலியவர்கள். சீர்திருத்தங்கள்செய்த சாமந்தனார், சாஸனத்திற்கூறப்பட்டிருக்கும் அழகியசோழபிரம்மாதராயரா யிருக்கலாமோவென்று ஊகம் தோன்றுகிறது. இவர் வியவஸ்தைசெய்தகாலத்துக் கோயில்நிலங்கட்கு விசாரணைக்கர்த்தாஉத்தியோகம் ('கோயில்கூறு') வகித்திருந்தார்.

இச்சாஸனத்திற்கூறப்பட்டுள்ள ஜீயர் நாராயணதாசர்என்பவர், திருவரங்கந்திருப்பதியிற் பலகைங்கர்யங்களைச்செய்தும், சுதர்சனசதகமுதலியஸ்தோத்திரங்களைஎழுதியும், சுதர்சனோபாஸ்தியால்மஹாமாந்த்ரீகராய் எழுந்தருளியிருந்த நலந்திகழ் நாராயணஜீயரோவென்று சங்கிக்கலாமென்றால் அதுஇயலாதென்றுதோன்றுகிறது. ஏனெனில்,இச்சீயர் ஸ்ரீரங்கம்கோயிலொழுகின்படி கூரத்தாழ்வான்சிஷ்யர் என்றும், பெரியதிருமுடியடைவின்பிரகாரம் பராசரபட்டர்சிஷ்யர்என்றும்விளங்குகின்றது. ஆழ்வான்காலஞ்சென்றது உடையவருக்கும் முன்னமேயே; அதாவதுகி.பி.1137க்குமுன்னமேயென்றால் ஆழ்வான்சிஷ்யனென்னப்பட்டவர் இச்சாஸனகாலத்திற்குறைந்தபக்ஷம் 100வயதிற்குமேற்பட்டவராக

வேண்டும். ஆனாலும் இவரே தானாகவேண்டுமென்பதற்கும் இடமுண்டு; ஏனென்றால், பெரியதிருமுடியடைவில் இவர் சிஷ்யர்கள்பெயர்களைக் குறிக்கும்போது சுந்தரபாண்டியதேவனும் ஒருவனென்று சொல்லப் பட்டிருக்கிறது. இவ்விஷயம் உண்மையாகிற் சாஸனத்திற்கூறிய ஜீயர் நாராயணதாசர், கூரநாராயணஜீயரும், அவர்சிஷ்யன், சோணாடுவழங் கிய மாறவன்மனான சுந்தரபாண்டியனு மாவார்கள். இச்சீயர்பெயரை முதலிற்கூறியிருக்கிறபடியாலும், ஆட்சியும் சுந்தரபாண்டியனதாகை யாலும், ஜீயர் நாராயணதாசர் குருவும் அரசன் சிஷ்யனும்ஆக இட முண்டு.

சாஸனத்தில் 'திருவாசல்ஆரியர்' என்றிருப்பதனால், கோயிற்றிரு வாசற்காவல் வேலையும் பிராம்மணர்களுக்கேகொடுக்கப்பட்டுவந்த தென்று நன்றாய்விளங்குகிறது. இப்பெயரே இக்காலத்தும் 'ஆரிய பட்டாள்வாசல்'என் றோர்வாசலுக்கு வழங்கிவருகிறது. இவ்வாசலை யும், ஆரியபட்டாளையுங்குறித்து ஒரு நம்பத்தகாதகதையைக் கோயி லொழுகிற் காணலாம்.

ராஜமஹேந்திரன்திருவீதி யென்பது இரண்டாவதுபிராகாரம். இதன் வடமேற்குமூலையிலிருந்துதான் மணவாளமாமுனிகள் ஈடுசா தித்தது. இவ்வீதியின்மேலைப்பக்கத்தில் இச்சாஸனத்திற்கூறிய மஹா ஸங்கம் கூடியது.

இவ்வியவஸ்தையையும் இதுபோன்றபலவற்றையும் ஆழ்ந்துநோக் கும்போது, அக்காலத்து ராஜரீகத்தில் தெற்றுநேர்ந்தபொழுது எப் படி மகாஜனசபைகள்கூடித் தங்களுக்குண்டான கஷ்டநிஷ்டூரங்களை யெடுத்து வெளியிற்காண்பித்துவந்தார்களென்பதும், அவ்வாறுகூடிய மகாஸபைகளில் அநியாயங்களெவ்வாறு பரிகரிக்கவேண்டுமென்று தீர் மானங்களைச்செய்து அரசனுக்கறிவித்து அவைகளைப் போக்கிக் கொண்டுவந்தார்களென்பதும், வெகுஜனஅபிப்பிராயங்களை எவ்வாறு அரசர்களும் மதித்துவந்தார்களென்பதும் வெளியாகும். இக்காலத்து ஆங்கிலம்படித்த சிற்சில பிராக்ஞர்கள், பழங்காலங்களில் அரசன்மனப் போக்கே இராஜரீதியென்றும், அதனைத்தடுக்க ஒருவிதஹேதுவும் கிடையாதென்றும் தாராளமாய்த் தங்களபிப்பிராயத்தை வெளியிடக் கண்டுள்ளோம். ஆராய்ச்சியற்ற இவ்விதஅபிப்பிராயங்களால் என்ன பயனுண்டாகுமென்பதைப் புத்திமான்கள் அறியலாம்.

சாஸனத்தின்வாக்கும், நடந்த அநியாயங்களுக்குத்தக்கவண்ணம் அமைந்துள்ளது.

---

## I-வது சாஸனம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ: பாற்கஃ வ்யவஸ்தைப்படி [।*] ஸ்ரீகோமாரபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சோணாடுவழங்கிஅருளிய ஸ்ரீஸுந்தர பாண்டியதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது-

2. மேஷநாயற்று அபரபக்ஷத்து த்ருதீயையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற விசாகத்துநாள் [।*] ஜீயர் நாராயணதாஸரும், கோயில் [க்]கூறு உடையார் அழகியசோழப்ரஹ்மா-

3. ராயரும், பெரியதிருப்பதி ஸ்ரீபாகவதநம்பிமாரும், திருவரங்கத்து ஸபையாரும், விண்ணப்பஞ்செய்யும் நம்பிமாரும், ஸ்ரீபாதந்-

4. தாங்கும்நம்பிமாரும், திருவாசல்ஆரியருள்ளிட்ட பலபணிநிபந்தக்காரரும், கோயிலகரத்து பட்டர்களும், எம்பெருமானார்திருவடிகளை ஆச்ரயித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களும், பெரியதிரு-

5. நாள்சேவிக்க நடந்த...........மண்டலத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் ராஜமஹேந்திரன்திருவீதி மேலைத்திருவீதியில் குறைவறக்கூடி இருந்து வ்யவஸ்தைபண்ணினபடி [।*] முன்னா[ள]ால் கோயிலுக்கு நிர்வ்வாஹ-

6. கராய் பதின்முசெய்துபோந்த பத்துப்பேருமாக அவவர்காலத்துப்பெயரோடேகூடிநின்று கோயிலிலும் நிமந்தக்காரர்பக்கலிலும்ஒட்டுக்காசு கூட்டிக்கொடுக்கையாலும் நிலையாள்ஒன்றுகூட்டி திருவிடையா-

7. ட் டங்களில் நெல்லை எடுத்து ஒட்டர்[க்*]கு கொடுக்கையாலும் மற்றும் பலவழிகளாலே திருவிடையாட்டத்தில் உடல்களை அழிக்கையாலே இரண்டு ஸஹஸ்ரத்திலாக முன்னூற்றுச்சின்னம் நா-

8. ள் திருவாராதனம் ஒருநாள்படிகொண்டு பலநாள்படிசெலுத்த இப்படி நாள்விழுகையாலும், பலமண்டலங்களில் திருவிடையாட்டங்கள் தங்களுக்குப்பற்றாக கூறிட்டு அடைத்துக்கொண்டு தங்கள் ஆள்க-

9. ள்போகவிட்டு தண்டிவந்த உடல்களை தாங்களும் ஒட்டருமாக கொள்கையாலும், இப்படி திருவாராதனந் தட்டுப்பட்டதென்றும் ஸ்ரீபண்டாரஉடல்கள் இப்படி அழியாநின்றதென்றும் மாற்கங் கொதித்துக் கூப்பிடதெரிய-

10. ச்செய்தேஇவர்கள் தாங்கள் பருமைபடத்திரிகையாலும் இப்போது ஒட்டற்கு காலமன்றியே ராஜகீயமாய் நஞ் சாமந்தனே கோயிலைக் கைகொண்டு இரண்டுகரை நாட்டுத் திருவிடையாட்டங்களையும் தந்து அமுதுபடிசாத்து-

11. ப்படிகளும் குறைவற்று திருப்பணிகளும்சென்று நல்லகாலமாயிருக்க முன்பு ஒட்டருடனேகூடிநின்று அன்னியாயகாரிகளாய்ப் போந்த இவர்கள் நெடுநாள்பட காணிபோலேசெய்துபோருகையாலே இப்படி அனியாய-

12. ங்கள் பிறந்தது. இப்படிசெய்துபோந்த இவர்களைதவிர்ந்து ஸ்வதந்த்ரவ்யவஸ்தமாக பெரியதிருநாள் ஸ்ரீபுஷ்யாமஞ்சமைந்தவாறே பதினெட்டுமண்டலமும்கூடிஇருந்து இத்திருப்பதிகொத்திலே ஆ-

13. ரைத்தட்டி இடக்கடவதாகவும்[॥*] ஆண்டாசறுதியானவாறே மாறிஆவாரை பா[ர்*]த்து இடக்கடவதாகவும் [॥*] ஸ்ரீவைஷ்ணவ வாரியத்துறைகளும் இப்படியே ஸ்வஸ்வாதந்த்ர்யமாக மாறி

14. இடக்கடவதாகவும் [॥*] இப்படி வ்யவஸ்தை பண்ணினோம் [॥*] பணியால்இவைகோயில்கணக்கு அரிசாணலையப்பிரியனெழுத்து. [॥*] இப்படி இரண்டாயிரம் எழுத்திட்டுவிட்டது [॥*].

ஸ்ரீரங்கத்து இரண்டாவதுசாஸனத்திற், காஞ்சீபுரத்தில், திருப்பாடகத்தினவரும், ஸகலவித்தியாசக்கரவர்த்திகளென்று பட்டப்பெயர் படைத்தவருமான சொக்கவில்லிபட்டரென்பவர், தாம் முன்னாள் வீரபாண்டியனிடமிருந்துபெற்ற ரத்னமிழைத்த கரண்டமகுடம் ஒன்றையும், பொன்சுருக்கினகாம்புடைய சாமரங்களிரண்டையும், ஒரு காளாஞ்சியையும், பெரியபெருமாளாகிய ரங்கநாதனுக்கு, ஹொய்சள வீரராமநாததேவர் ஆட்சியின் பதினைந்தாமாண்டிற்கொடுத்தாரென்று எழுதியிருக்கிறது.

இச்சாஸனத்திற்கூறியிருக்கும்வீரபாண்டியன் முடிசூடியவருடம் கி. பி. 1253; ஹொய்சளவீரராமநாதன் ஆட்சியின் 15-ம்வருடம் கி.பி. 1270. ஆதலால் கி. பி. 1253-க்குப்பிற்பட்டதும் 1270-க்குமுற்பட்டதுமான இடைக்காலத்தில், தான் வீரபாண்டியனிடமிருந்து பரிசுபெற்றகிரீடம், சாமரம் முதலியவைகளைச் சொக்கவில்லிபட்டர் கொடுத்தாரென்பதுதான் சாஸனத்தின் சாரம்.

தமிழ்ச்சாஸனத்தின்விஷயங்களையே ஒரு ஸமஸ்கிருதசுலோகத்திலடக்கிக்கூறியிருக்கிறது.

---

## II-வது சாஸனம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ꞉। [||*] யத் ஸ்ரீகாஞ்சீவீரபாண்ட்யாத் க்ருஹீத்வா
கிரீடம் ரத்நாட்யம் ஸ்வர்ணவிஸ்ராணிதசாமரே ராஜ்யஸ்ரீ ஹேமதண்டே

(2) ஸகலகலாஸார்வபௌமோ நர்ஞ்ச। தஸ்மை ஸ்ரீரங்கநாதாய
காஞ்சீபுரீவாஸ்தவ்யோ வித்வத்ஸம்ஸ்துத꞉

(3) ஸ்ரீரங்கராஜாய ஸமர்ப்பயாமாஸ சொக்கவில்லி꞉ ஸுதீ꞉ || I

(4) ஸ்வஸ்திஸ்ரீ [||*] ஸகலபுவனசக்ரவர்த்தி
ஹொய்ஸளவீரராமநாததேவற்கு யாண்டு பதினஞ்சா-

(5) வது ஸிம்ஹநாயற்று ஶுக்லபக்ஷத்து [illegible]யும திங்கள்கிழமையும்பெற்ற [illegible]திநாள், பாடகத்துச் சொக்-

(6) கவில்லிபட்டரான முதலியார் கரியமணி ஸகலவித்யாசக்ர வர்த்திகள் தமக்குப் பெருமாள் வீரபாண்டியதேவர் குடுத்தவையா-

(7) ய்ப் பெருமாளுக்குத்தந்து பொற்பண்டாரத்துக்கு முதலாக ஒடுக்கின ரத்நங்கட்டின [illegible]ம்ஒன்றும் பொன்சுருக்கினகா-

(8) ம்புடைய திருவெண்சாமரை இரண்டும் பொன்னின் காளாஞ்சி ஒன்றும் ஆக உரு நாலு உ

---

I இந்தஸ்லோகம், மூலசாஸனத்தில் தேவநாகரஎழுத்தில் வரையப்பட்டுள்ளது. இதன்பொருள் :— ஶக்ரமௌலிந்யஸ்தஹஸ்தாரவிந்த: - இந்திரன்முடிமேல் (வளை)எறிந்தகரகமலங்களையுடையவனாகவும். [illegible] - கல்வித்திறமைகண்டு களிப்படைந்தவனாகவும்உள்ள வீரபாண்ட்யாத் - வீரபாண்டியனிடத்தினின்றும், பு⁴வி - உலகில், ஸகலகலாஸார்வபௌமேதி - ஸகலகலாசார்வபௌமன்என்றபட்டம்பெற்றவனாகிய சொக்கவில்லிபட்டனாலே, [illegible] - வித்வத்சக்ரவர்த்தியாயிருத்தற்கு அறிகுறியானபரிசாக, யத் - எந்த, உஜ்ஜ்வலரத்நமௌலி - ஒளிமிக்கமணிமகுடமும், இந்துச்சாயாபஹாரம் - சந்திரகிரணங்களையபகரித்தனவாய்விளங்குகின்ற, சாமரத்வந்த்வம் - உபயசாமரங்களும், கலாஞ்ஜீஸஹிதம் - காளாஞ்சியோடு, [illegible] - அடையப்பட்டனவோ, தத் - அவை, தேந - அந்தச்சொக்கவில்லிபட்டனாலே, த்ரிதாம்நே - ஸ்வேதத்வீபம்,அநந்தாஸனம்,வைகுண்டம்என்கிறமூன்றுஸ்தானங்களையுடைய, ரங்கதாம்நே - திருவரங்கப்பெருங்கோயிலுடையானாகிய அழகியமணவாளனுக்கு, [illegible] - ஸமர்ப்பிக்கப்பட்டன என்பதாம்.

T. A. கோபிநாதராவ், எம். ஏ.

---

ஸ்ரீ:

# மகளிர்மனம்.

——(o)——

ஒத்தபிறப்பினையுடைய மக்கட்சாதியுள் ஆண்பெண் என்னு மிரு திறத்தாரும் உருவமாகியவடிவத்தால், தம்முள் வேறுபட்டிருப்பது போல அருவமாகிய மனத்தாலும் வேறுபட்டவர்களெனப் பல புத்தகங்களிலும் படித்திருக்கிறோம். அவ்வேறுபா டென்னவெனவிசாரிக்குமிடத்துப் பெண்மக்களறிவு, மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு (அதாவது கூச்சம்) என்னுங் குணவிசேடங்களொடுகூடியதென்றும், ஆண்மக்களறிவு, அவற்றிற்கெதிரான ஒண்மை பெருமிதம் வீரம் கூசாமை என்னுங் குணவிசேடங்களொடுகூடியதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இங்கு மகளிர்க்குச்சொல்லியவையெல்லாம் இந்நாடுபோன்ற சில நாட்டின்கணுள்ள மகளிர்க்குள்ளனவாயினும், பெண்கல்விமிக்க பிறநாட்டிலுள்ள மகளிர்க்கெல்லா மில்லாமையாலும், பொதுவாக மகளிர்மனத்துக்குள்ள வேறுபாடென்றுசொல்ல இடமில்லாதிருக்கிறது. வேறு சிலர்,

"அன்புநூலாகவின்சொலலர்தொடுத்தமைந்தகாத
வின்பஞ்செய்காமச்சாந்திற்கைபுனைந்தேற்றமாலை
நன்பகற்சூட்டிவிள்ளாதொழுகினுநங்கைமார்க்குப்
பின்செலும்பிறர்கணுள்ளம்பிணையனார்க்கடியதன்றே"* எனவும்,

"ஏந்தெழின்மிக்கானிளையானிசைவல்லான்
காந்தையர்கண்கவர்நோக்கத்தான் — வாய்ந்த
நயனுடையின்சொல்லான்கேளெனினுமாதர்க்
கயலார்மேலாகுமனம்"†

எனவும் சொல்லிய ஆதரவுகளைக்காட்டிப் பிறரைவிரும்புமியல்புடைமை என வேறுபாடுகூறுகிறார்கள். இதுவு மொருவாற்றா னுளதாயிருப்பினும் அது கற்புடைமகளிர்க்கேலாமையாலும், "திருவினுநல்லாண் மனைக்கிழத்தியேனும், பிறர்மனைக்கேபீடழிந்துநிற்பர்"‡ என ஆடவர் மனத்துக்கும் பிறரைவிரும்பும் அவ்வியல்புண்டென்று சொல்லப்பட்டமையாலும், அது மகளிர்மனத்துக்கேயுரிய சிறந்த வேறுபாடாகாதென்று தோன்றுகிறது.

---

* சீவகசிந்தாமணி 7-வது கனகமாலையாரிலம்பகம் செய்யுள்—40.
† நீதிநெறிவிளக்கம் செய்யுள்—82.
‡ நீதிநெறிவிளக்கம் செய்யுள்—80.

மகளிர்மனத்துக்கேசிறந்த வேறுபா டொன்றிருக்கவேண்டுமென் பதை "இனம்போன்றினமல்லார்கேண்மை, மகளிர் மனம்போல வேறு படும்"* என்பதனால் அறிகிறோம். இதனால் மகளிர்மனத்தின்கண் வேறுபாடில்லையென்றுசொல்ல இடமில்லாதிருப்பதேயன்றி, அது உவமையாகக்காட்டப்பட்டமையால் முற்காலத்து வெளிப்படையா யெல்லாராலு மறியப்பட்டுள்ளதென்றுந் தோன்றுகிறது. அது இக் காலத்தில் அரிதற்கரியதாயிருப்பதால், அக்குறளுரையைப்படித்துப் பார்த்ததிலும் அது இன்னதென நன்குவிளங்கவில்லை. அதனை யறியவேண்டுமென்னு மவாமேலீட்டால் ஆராய்ச்சிசெய்ததில் ஆங்கி லத்திற்படித்த அழகியசரிதமொன்று ஞாபகமாயிற்று. அதாவது:—

இங்கிலாந்தில் ஆர்தர் (Arthur)என்பவன் அரசுசெலுத்துநாளில் ஒருவீரன் தான்செய்த கடுங்குற்றத்தின்பொருட்டுத் தன்றலைதுணிப் புண்ணுமாறு தீர்மானிக்கப்பெற்றான். ஆயினு மரசன் தன்மனைவியின் வேண்டுகோளால் அவள்விரும்பியவண்ணம்செய்யுமாறு அக்குற்ற வாளியை யவளிடமனுப்பினன். அரசி அவ்வீரனைநோக்கி உலகத் துள்ளமகளிர்யாவரும் எல்லாவற்றுள்ளும் பெரிதும்விரும்புவது யாது என்பதற் கேற்றவிடையை (ஒருகுறித்தகாலத்துள்) அறிந்துவந்து சொல்வையானால் உன்னை விடுதல்செய்வேனென்றாள். அதற்கிணங்கிய வீரன் விடைநாடிச்சென்றவிடமெங்கும் ஏற்றவிடை கிடைத்திலதாக, அவன் உயிர்துறத்தற்கிசைந்து தன்னகரைநோக்கிமீளவரும்போது, ஒரு தெய்வமுதுமகளா லரசிகருதியவிடையையறிந்து அவட்குரைத்து உயிர்பிழைத்தான் என்பதாம்.

அங்ஙன மவன் உயிர்பிழைத்தற்கேதுவாயிருந்த விடையுரையாவது; "பெண்கள்யாவரும் தம்கணவரைத் தா மடக்கியாளவிரும்புவர் என் பதே" இதனால் மகளிர் தங்கணவரைத் தம்வயமாக்கிக்கொள்ளவிரும்புங் கருத்துடையர் என்பது பெறப்பட்டதாயிற்று. ஆகவே இடம்பார்த் திருந்து சேர்த்தவிடத்து ஆடவரைத் தம்வயப்படுத்தற்கு அவாவிநிற்கும் மனநிலையே மகளிர்மனத்தின்கணுள்ள வேறுபாடென ஆங்கிலத்தில்

---

* திருக்குறள் 83-ம் அதிகாரம் (கூடாநட்பு) குறள்—2.

தெய்வம்வந்து சொல்லித் தெரிந்ததாக அருமைபாராட்டப்பட்டிருக்கிறது. இது பண்டைக்காலத்துத் தண்டமிழ்ப்புலவர்களும் கொண்ட கருத்தென்பது பின்வருமவற்றானு மறியத்தகும்.

சிந்தாமணியுள் "அண்ணலங்களிற்றினை யடக்கினான்சீவகன், வண்ணமேகலையினார்மனமெனப் படிந்ததே"* என்று சீவகனிடத்துப் பிறர்க்கடங்காத மதயானையடங்கிய அடக்கத்திற்கு மகளிர்மனம் உவமையாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் யானையும் மகளிர்மனமு மொருதன்மையுடையவென விளங்கும். இனி நாலடியுள்,

"யானையனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும் —யானை
யறிந்தறிந் தும்பாகனையேகொல்லுமெறிந்தவேன்
மெய்யதாவால்குழைக்குநாய்"†

என யானை கூடாநட்பிற்கு உவமையாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் யானையும் கூடாநட்பும் ஒருதன்மையுடையவாயின. ஆகவே மகளிர்மனமும் கூடாநட்பும் ஒருதன்மையுடையவாமாகையால், கூடாநட்புக்குத் திருக்குறளில் "இனம்போன்றினமல்லார்கேண்மை மகளிர், மனம்போலவேறுபடும்" என மகளிர்மனம் உவமையாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் யானையின்றன்மையும், கூடாநட்பின்றன்மையும், மகளிர்மனத்தின்றன்மையும் ஒன்றுபட்டிருக்கவேண்டும். அதாவது உரியோர்க்கடங்கியிருப்பதுபோன் றவர்சோர்வுபார்த்து வாய்த்தவிடத்து அவரைத் தன்வயமாயடங்கச்செய்யும்நோக்கமுடைமையென விளங்குகிறது. இதனைப் "பெண்மனம்பேதின்றொருப்படுப்பேனென்னு மெண்ணிலொருவன்"‡ எனத் திருக்குறளுரையாசிரியர்காட்டிய மேற்கோளும் ஆதரிக்கிறது. எங்ஙனமெனில், பேதின்றொருப்படுப்பேனென்றதில், பேது என்பது ஒருமைப்படுதற்கு மறுதலையாயுரைக்கப்பட்டிருத்தலால்அதனைப் பேதைமைஎனக்கொள்ளாது,"பேதுசெய்துபிளந்திடல்பெட்டதே"§ என்புழிப்போலப் பொருளொடுபொருந்தவேறுபடுதற்பொருளே குறித்துநிற்குமாற்றாலறியலாம். இதனால்ஆடவர்மனத்தி

* சீவகசிந்தாமணி, 7 கனகமாலையாரிலம்பகம் செய்யுள்—276.
† நாலடியார் 22-வது அதிகாரம் (நட்பாராய்தல்) செய்யுள்—3.
‡ திருக்குறள் 83-ம் அதிகாரம் (கூடாநட்பு) 2-வதுகுறளின் உரைபார்க்க.
§ சீவகசிந்தாமணி, 8 விமலையாரிலம்பகம் செய்யுள்—32.

னின்றும் மகளிர்மனத்துக்குள்ள வேறுபாடு அவர் கணவரைவயப்படுத் தக்கருதுதலென்பது பெறப்படுமாயினும் அத்தன்மை ஆடவர்மனத் தின்கண்ணு மிருக்குமாயின் மகளிர்மனத்திற்குச் சிறந்ததன்றாய்விடும். ஆடவர்மனத்தின்றன்மையை யாராயின், அவர்மனத்துக்கு இத்தன்மை யின்றி அம்மகளிர்க்கே தாம்வயமாகுந்தன்மையே யியல்பாயுள்ளதென வும், அது தீமைபயப்பதெனவு முணர்ந்தே அதனைநீக்குதற்குத் திருக் குறளுள்ளேயே பெண்வழிச்சேறல் என்னும் அதிகாரமும் படிக்கப்பட் டிருத்தலால் வயமாக்குந்தன்மை மகளிர்மனத்துக்கே சிறந்ததாயிருக் கிறதெனவிளங்குகிறது.

ஆயின், கொழுநர்வழிநிற்குங் கற்புடைமகளிர்மனத்து மித்தன்மை நிகழலாமோவென்ற சந்தேகமுண்டாகலாம். அது அங்கு நிகழாதாயின் "மகளிர்மனம்போலவேறுபடும்" என்றது நிரம்பாதாகும். ஆதலால் அவர்மனத்தும் அத்தன்மையுள்ளதென்றே கொள்ளவேண்டும். ஆனால் அது கற்பொடுபொருந்துவதெப்படியென்றால் அவர் கணவரை நெறியி னீங்கியசெய்யவிடாது நெறிவழியொழுக்கற்பொருட்டுத் தம்வயமாக்க விரும்புவராதலா லது குற்றமாகாதாயிற்று. இதனை, "அறவோர்க் களித்தலு மந்தணரோம்பலுந், துறவோர்க்கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர்கோடலு மிழந்தவென்னை"* எனப் பத்தினிப் பெண்டின்கூற்றுள்ளே அறவோர்க்களித்தன்முதலியவற்றைத் தனக் குரிமையாக்கிக் கணவன் றன்வயமின்மையா லவற்றைத் தா னிழந்த தாகக்கூறியகூற்று லறியலாம். அன்றியும், கணவர்வழியொழுகுங் கற் புடைமகளிரும் வாய்த்தவிடத்து அக்கணவரைத் தம்வயப்படுத்தும் நோக்குடையரென்பதைத் திருக்குறளுட் 'புலவி,' 'புலவிநுணுக்கம்' என்னு மதிகாரங்களா லறியலாம். ஆகவே ஆண்மக்கள்மனத்தினின்றும் பெண்மக்கள்மனத்துக்குள்ளவேறுபாடு, கொழுநரைத் தம்வயமாக்கு நோக்குடைமை தொன்றுதொட்டுண்டென்பதைப் பற்பலநூற்றாண்டு கட்குமுன்னமே நந்தமிழ்ப்பாவலர் கண்டறிந்ததென்பது தெளிவா யிற்று.

T. N. அப்பன்.

---

* சிலப்பதிகாரம் 16-வது கொலைக்களக்காதை அடி 71—73.

# மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

# MADURA NAYAK KINGS.

"செந்தமிழ்" (தொகுதி-௧௪ பகுதி ௬ல்) ௩௬௦-ம்பக்கத் தொடர்ச்சி.

(1559—1736).

**நாயக்கர்வம்சஸ்தாபனம்.** கி. பி. 16-ம் நூற்றாண்டின் நடுவில் பாண்டியவம்சத்தைச்சேர்ந்த சந்திரசேகரபாண்டியன் மதுரையில் பட்டந்தரித்தான். அக்காலத்தில் மதுரைராஜ்யம் க்ஷீணதசையடைந்து பல வேற்றரசர்கள் ஹிம்ஸைக்குட்பட்டுக் கடைசியாய் விஜயநகரஸம்ஸ்தானத்துக்கு ஓர் சிற்றரசாகவும் ஆய்விட்டது. பாண்டியஅரசர்கள் பலஹீனர்களாகவும் தங்கள் அரசைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வலிமையற்றவர்களாகவும் ஆய்விட்டார்கள். இந்தநிலைமையில் முற்கூறிய சந்திரசேகரன் பட்டத்துக்குவந்தான். அக்காலத்தில் விஜயநகர ராஜ்யத்தில் ராமராஜா அரசாண்டுகொண்டிருந்தார்.

சுமார் 1557-ம்ஆண்டில் தஞ்சையிலரசாண்ட வீரசேகரசோழன் மதுரைமீதுபடையெடுத்துவந்து பாண்டியன்மீது வெற்றிபெற்றுப் பாண்டியநாட்டைத் தனது ஆதீனத்துக்குட்படுத்திக்கொண்டான். சந்திரசேகரபாண்டியன் தன்மக்களுடன் தப்பியோடி விஜயநகரம்சென்று ராமராஜனைத் தஞ்சமடைந்தான்.

ராமராஜன் அபயம்கூறி, உடனே ஒருபெருத்தசேனையைத் தன் தளகர்த்தன் நாகமநாயக்கனுடன் அனுப்பினான். நாகமன் தஞ்சை மன்னனைவென்று மதுரைக்கோட்டையையும் மதுரைராஜ்யத்தையும் கைவசப்படுத்திக்கொண்டான். பிறகு தன் அரசன்கட்டளைப்படி பாண்டியராஜ்யத்தைச் சந்திரசேகரனிடம் ஒப்புவிக்காமல், தானே சுவாதீனமாய் அரசாள ஆரம்பித்துவிட்டான்.

இத்துரோகத்தையறிந்த ராமராயர் அதிககோபங்கொண்டு தன் சபையோரைவரவழைத்து நாகமன்செய்ததுரோகத்தை யவர்களுக்கு அறிவித்து "அத்துரோகியின் சிரஸைக்கொய்துவரக்கூடிய திறமை வாய்ந்தவர் இச்சபையில் ஒருவருமில்லையா?" என்று கோபத்துடனும் ஆத்திரத்துடனும் வினவினான். ஆங்குள்ளோர் ஒருவரையொருவர்

பார்த்தாரேயொழிய ஒருவராவது பதிலுரைக்கத்துணியவில்லை. இந்நிலைமையில் அதிஆச்சரியமானசம்பவம் ஒன்று நேர்ந்தது. துரோகி நாகமன்புதல்வனான விசுவநாதநாயக்கன் சபைநடுவே எழுந்துநின்று தான் அக்காரியத்தைச்செய்வதாய் அரசனுக்குஅறிவித்தான். அரசன் முதலில் அவன்மீது சந்தேகங்கொண்டபோதிலும் பிறகு விசுவநாதன் மீது நம்பிக்கைகொண்டு தக்கசேனையுடன் அவனை அனுப்பினான். விசுவநாதன் மதுரைமீதுபடையெடுத்துச்சென்று தன்தகப்பனைத்தோற்கடித்து அவனைச் சிறைபிடித்துவந்து ராமராஜனிடம் ஒப்புவித்தான். ராமராஜன் மிக்கசந்தோஷத்துடன் விசுவநாதனைநோக்கி "உனக்கு என்னவேண்டுமானாலும் அதைக்கூறுவாயாகில் நான் மனமுவந்து அளிக்கின்றேன்'' என்றான். விசுவநாதன் தன்தகப்பனுக்கு உயிர்ப்பிச்சையளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறே நாகமனைக் கொல்லாதுவிட்டுவிட்டான். அத்துடன் கலகமும் ஒடுங்கிவிட்டது. 1599ம்ஆண்டில் பாண்டியராஜனை மதுரைராஜ்யத்தரசனாக முடிசூட்டி விசுவநாதநாயக்கனை விஜயநகரராஜ்ய ப்ரதிநிதியாகவும் பாண்டியனுக்கு உதவியாகவுமிருந்து மதுரையைப் பரிபாலனஞ்செய்துவரும்படி ராமராஜன் நியமித்தான்.

## விசுவநாதநாயக்கன்.

## (1559—1563).

முற்கூறியவாறு பாண்டியராஜனுக்கு உதவியாகவும் விஜயநகர ப்ரதிநிதியாகவும் விசுவநாதன் மதுரையைப்பரிபாலித்துவந்தான். தனது சௌரியத்தாலும் ஆட்சித்திறமையாலும், கலகக்காரரையெல்லாம் அடக்கி எங்கும் அமைதியை நிலைநாட்டினான். பாண்டியர்கள் கேவலம் பேருக்குமாத்திரம் சிலகாலம் அரசர்களாயிருந்தார்கள். மதுரைராஜ்யபரிபாலனமுழுமையும், விசுவநாதனாலும் அவனுக்குப் பின்வந்த நாயக்கர்களாலுமே நடத்திவரப்பட்டது.

**பேர்துநன்மைகள்.** விசுவநாதன்காலத்தில் தேசக்ஷேமகரமான காரியங்கள் பல செய்யப்பட்டன. இவனுக்கு உதவியாய் இவனுடன் ஒத்துத் தர்மசிந்தனையுடன் வேலைசெய்தவர் ஆர்யநாயகமுதலிஎன்பவர். இவர் தாழ்ந்தநிலைமையிற்பிறந்து விஜயநகரஸம்ஸ்தானத்தில் உயர்ந்த பதவிக்குவந்தவர். விசுவநாதனுக்கு உதவித்தளகர்த்தராய் மதுரைமீது

படையெடுக்கையில்வந்தவர். விசுவநாதன் ப்ரதிநிதியானதும் ஆர்ய நாயகமுதலி விசுவநாதனின் *தளவாய்ஆக நியமிக்கப்பட்டார்.

துஷ்காலங்களில் தங்கள் ஊரைவிட்டு ஓடிப்போயிருந்த குடிகளெல்லோரும் திரும்பிவந்து விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலான தம்தம்தொழில்களைச் செய்யத்துடங்கினார்கள். சிறிதுகாலத்துக்குள் தேசமெங்கும் செல்வமும் செழிப்பும் தழைத்தோங்கின. ஆலயங்களும் அக்ரகாரங்களும் ஆங்காங்கு நிர்மிக்கப்பட்டன. வைகையாற்றில் முற்காலத்தில்கட்டப்பட்டுள்ள பேரணை, சிற்றணையென்பவை இவர்களாலென்றே ஊஹிக்கப்படுகின்றது. வைகையாற்றி லநேகம் பாசனக்கால்வாய்கள்வெட்டி நீர்வளமில்லாதிருந்த பலபாகங்களை நீர்வளமுடையதாக்கினார்கள்.

**திருச்சிராப்பள்ளி.** ஸ்ரீரங்கம், ராமேசுவரம்முதலான ஸ்தலங்களுக்குப்போகும் மார்க்கங்களெல்லாம் கள்ளர்பயத்துக்குட்பட்டிருந்தன. அதையடக்கவேண்டியமுயற்சிகள் விசுவநாதனும் ஆரியநாயகனும் செய்தார்கள். தஞ்சைமன்னனுக்கு வல்லம்கோட்டையைக்கொடுத்துத் திருச்சிராப்பள்ளியைப் பரிவர்த்தனையாய்ப்பெற்று, அதன்கோட்டையைப் பலவிதமாய்ப் பலப்படுத்தினார்கள்.

ஆங்காங்கு பலவிடங்களில் தக்கபாதுகாவல்செய்து கள்ளர்பயத்தை நீக்கினார்கள். யாத்திரைசெய்பவர்கள் நிர்ப்பயமாய்த் தேசஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

**திருநெல்வேலி.** விசுவநாதன் இவ்வாறு திருச்சிராப்பள்ளிச்சீமையைச் சீர்படுத்திக்கொண்டிருக்கையில் தளவாய் ஆரியநாயகமுதலி திருநெல்வேலிப்ரதேசத்தைச் சீர்படுத்தச்சென்றான். 'பஞ்சபாண்டவர்கள்' என்ற பேர்வஹித்த ஐந்துதலைவர்கள் திருநெல்வேலி **கயத்தார் என்னும்** நகரத்தில் ஸ்வாதீனமாய் ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு நாயக்கர் அதிகாரத்தைத் தடுப்பதாய்ச் சபதம்செய்தார்கள். மதுரையிலாண்ட சந்திரசேகரரின் பாட்டனுடைய தாஸி புத்திரர்கள் இவ்வைவர்கள் என்றும், இவர்கள்வஞ்சனையால்தான் சந்திரசேகரன் ராஜ்யத்தைவிட்டோடி விஜயநகரத்தரசனைத் தஞ்சமடைய நேர்ந்ததென்றும் சொல்லுவதுண்டு. இவர்களையடக்க ஆரியநாயகமுதலி பலமுயற்சிசெய்தும்

* குறிப்பு—தளவாய், ராணுத்வமும் மந்திரித்வமும் கூடிய உத்யோகம்.

பயன்படவில்லை. இச்செய்திகேட்ட விசுவநாதன் பெருத்தசேனையுடன் திருநெல்வேலிக்கு விரைந்துவந்தான். தலைவர்கள் எதிர்த்துப் போர் புரியப் போதுமானசேனையும் பணமுமில்லாதவர்களானதால், காடுகளில் மறைந்திருந்து சௌகரியமானபோது திடீரென்றுதாக்குவதும் ஓடிப்போவதுமாயிருந்து, இவ்வாறு விசுவநாதன்சேனையைப் பலவாறு உபத்திரவப்படுத்திவந்தார்கள்.

விசுவநாதன் ஒருயுக்திசெய்தான். தலைவர்கள் ஐவரும் ஒன்றுகூடித் தான் ஒருவனுடன்சண்டையிட்டு அவர்கள் ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை யவர்களே ஆளவிட்டுவிடுவதாயும், தான்ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை இழந்துவிடவேண்டுமென்றும் சொல்லியனுப்பினான். ஐவரும் தங்களில் ஒருவரே சண்டைசெய்ய முன்வருவதாய் அந்த நிபந்தனைகட்குட்பட்டார்கள். பிறகு நடந்த த்வந்த்வயுத்தத்தில் ஐவர் தலைவன் மரணமடைந்தான். ஒப்பந்தப்படி மற்றநால்வரும் தங்கள் சீமையையிழந்து பரதேசஞ்சென்றார்கள். இவ்வாறு திருநெல்வேலிச் சீமையும் மதுரைநாயக்கர் ஆட்சிக்குட்பட்டுவிட்டது.

பாளையக்காரர்கள். நாயக்கர்வருவதற்குமுன்னமேயே, மதுரை ராஜ்யத்தில் அநேக ப்ரதேசங்களை யநேக தலைவர்களென்ற சிற்றரசர்கள் ஆண்டுவந்தார்கள். இவர்கள் மதுரைஅரசாட்சிக்குட்பட்டவர்களாய் மதுரைஅரசர்க்குக் கப்பம்செலுத்தியும் வேண்டும்போது சேனையுதவிபுரிந்தும்வந்தார்கள். முற்கூறியவாறு பாண்டியவம்சம் வரவர க்ஷீணதசையடைந்தபோது இத்தலைவர்கள் ஸ்வாதீனமடைந்து கப்பங்களைச் சரியானபடிசெலுத்தாமலும், கலகங்கள்செய்தும் வந்தார்கள்.

விசுவநாதனுக்குமுன்னமே, மகமதியர்உபத்ரவம் பொறுக்காமல் ஆந்திரதேசத்தினின்றும் அநேகநாயக்கர்கள் ஓடிவந்து பாண்டியதேசத்தில், குடியேறியிருந்தார்கள். விசுவநாதனுடன்வந்தவர்களும் பலர். இவர்கள் எல்லோரும் தங்கள்ஜாதியரான விசுவநாதனிடம் விசுவாஸமாயும் பக்ஷமாயுமிருந்தார்கள். விசுவநாதனும் ஆரியநாயகமுதலியும் மதுரைராஜ்யத்தை 72 பாளையப்பட்டுக்களாகப்பிரித்து முன்னிருந்தவரில் யோக்யமானவரை அவரவர்ஸ்தானத்தில் உறுதிப்படுத்தினதுடன், மற்றப்பாளையங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாயக்கத் தலைவனை நியமித்தார்கள். தம்தமக்குஅளிக்கப்பட்ட ஜமீனை (பூமியை)

ஆளுவதும், நாயக்கர்ராஜாங்கத்துக்கு வருஷந்தோறும் வரிசெலுத்துவதும், யுத்தகாலத்தில் சேனையுதவிசெய்வதுமே இவர்கள் கடமை. இவர்கள்தான் *ஜமீன்தார்கள் என்றும் பாளையக்காரர்என்றும் ‡சொல்லப்படுவார்கள். நல்லஎண்ணத்துடன்செய்த இவ்வேற்பாடு, பின்பு நாயுக்கர்வம்சம் பலஹீனமடைந்ததும், மதுரைஸம்ஸ்தானத்துக்கே உபத்ரவமாய்முடிந்தது.

முற்கூறியவாறு விசுவநாதன்காலத்தில் திருச்சிராப்பள்ளி மதுரை திருநெல்வேலி என்னும் மூன்றுஜில்லாப் பாகங்களும் மதுரைநாயக்கர் ஆட்சிக்குட்பட்டுக் கலகங்களெல்லாம்நீங்கி அமைதி நாட்டப்பட்டுச் செல்வம் சீருடன்செழித்தோங்கத் தலைப்பட்டன. இவ்வாறு அமைதியுடனும் தன்தளவாய் ஆரியநாயகமுதலியின் உதவியுடனும் சிறிது காலம் அரசாண்டு விசுவநாதன் 1563-ம்வருஷம் மார்கழிமாஸவாக்கில் மரணமடைந்தான்.

## 2. குமாரகிருஷ்ணப்பநாயக்கன்.

## (1563—1573.)

1563-ம் ஆண்டில் விசுவநாதநாயக்கன்மகன் குமாரகிருஷ்ணப்பநாயக்கன் பட்டத்துக்கு வந்தான். விஜயநகரஸமஸ்தானத்தின்மீது மஹமதியர் படையெடுத்துவருவதையறிந்து விஜயநகரத்துக்குதவியாய் மதுரைத்தளவாய் ஆரியநாயகமுதலி சென்றுவிட்டார்.

**தும்பிச்சிநாயக்கன் கலஹம்.** தும்பிச்சிநாயக்கன் 72 பாளையக்காரரில் ஒருவன். இவன் கலஹஞ்செய்து மதுரைமீதுபடையெடுத்துவரும்வழியில் பரமக்குடிக்கோட்டையைப் பிடித்துக்கொண்டான். குமாரகிருஷ்ணப்பன், தன் சேனைத்தலைவனான பெரிய கேசவப்பன்வசம் தக்கசேனையனுப்பக் கேசவப்பன் பரமக்குடிசென்று போர்புரிந்திறந்தான். பிறகு கேசவப்பன்மகன் 18000 வீரர்களுடன் சென்று தும்பிச்சிநாயக்கனைத் தோற்கடித்து அவனைப்பிடித்து

---

குறிப்பு— * ஜமீன்=பூமி, க்ஷேத்ரம்.
ஜமீன்தார்=ப்ரதேசஸ்வான்தார்.
‡ பாளையம்=சேனை.
பாளையக்காரன்=சேனைத்தலைவன்.

அவன் தலையைவெட்டி மற்றப்பாளையக்காரருக்கு எச்சரிக்கையாக மதுரைக்கு அனுப்பினன். இத்துடன் பாளையக்காரர்கலகமும் துவக்கத்திலேயே அடங்கிவிட்டது.

**கண்டிராஜன்போர்.** தும்பிச்சிநாயக்கன் நண்பனான கண்டிராஜன் தன்னை இகழ்ந்துபேசினன் என்று கேள்விப்பட்டுக் குமாரகிருஷ்ணப்பன் தக்க சேனையுடன் நவபாஷாணத்தின்வழியாய்க் கடலைத் தாண்டி இலங்கைசேர்ந்து கண்டிமீது படையெடுத்துச் சென்றான். கண்டிராஜன் தன் நாலுமந்திரிகளையும் எட்டுத்தேச நாதர்களையும் 40000 போர்வீரர்களுடன் மதுரைச்சேனையை எதிர்க்க அனுப்பினன். குமாரகிருஷ்ணப்பன் மிகுந்த சேனையை மூலபலமாய்ப் பின்னே நிறுத்திவிட்டு, 20000 போர்வீரருடன் கண்டிச்சேனையை எதிர்த்தான். கோரமான யுத்தம் நடந்தது. இருதிறத்திலும் மிகுந்தசேதம். கடைசியில் மதுரைச்சேனை வெற்றியடைந்தது. கண்டி மந்திரிகளில் இருவரும் ஐந்துதேசநாதர்களும் சிறைப்பட்டார்கள். பிறகு கண்டிராஜன் 60000 சிங்களருடனும் 8000 காபிர்களுடனும் தானே போர்புரிய வந்தான். கண்டிச்சேனை நாசஞ்செய்யப்பட்டுக் கண்டிராஜனும் குமாரகிருஷ்ணப்பன் எய்த அம்பினல் இறந்தான். கண்டிநகர் நாயக்கராஜன் வசப்பட்டது. தன் மைத்துனனான விஜய கோபாலநாயக்கனைக் கண்டிப்பிரதிநிதியாய் நியமித்துவிட்டுக் குமார கிருஷ்ணப்பன் மதுரைவந்துசேர்ந்தான்.

1565-ல் நடந்த தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகரச்சேனை மஹமதியரால் தோற்கடிக்கப்பட்டு விஜயநகரமன்னன் ராமராஜனும் உயிரிழந்தான். விஜயநகரும் மஹமதியரால் பாழாக்கப்பட்டது. அத்துடன் விஜயநகரஸமஸ்தானத்தின் பெருமையும் குலைந்துவிட்டது. அத்துடன் விஜயநகரத்துக்கு ஆதீனமான மைசூர்ராஜ்யம் ஸ்ரீரங்க பட்டணத்தலைவனுக்கும், தஞ்சைநாடு வீரராகவநாயக்கனுக்கும், மதுரைநாடு குமாரகிருஷ்ணப்பனுக்கும் அநேகமாய் ஸ்வாதீனமாயின. ஆரியநாயகமுதலி தலைக்கோட்டைப்போரினின்றும் 1566-ல் மதுரைக்குத்திரும்பிவந்தான். அவனே இம்மூன்றுதேசங்களுக்கும் தளவாயாக இருந்து காத்துவந்தான். தன் குடும்பத்தாரையும் நண்பரையும் காஞ்சீபுரத்துக்கடுத்த பெருநாட்டிலிருந்து வரவழைத்து மதுரைக்கடுத்த சோழவந்தானில் குடியேற்றினன்.

ஆரியநாயகமுதலியுதவியால், மதுரைராஜ்யத்தில் கலஹம் பஞ்சம் முதலான கொடுமைகளெல்லாம் நிவர்த்தியாய்விட்டன. குமார கிருஷ்ணப்பன் தேசக்ஷேமகரமான காரியங்களைச் செய்யத்துடங்கினன். கிருஷ்ணபுரம், கடயங்கிருஷ்ணபுரம் என்னும் கிராமங்களைத் திருநெல்வேலியில் ஸ்தாபனம்பண்ணினன். அநேக ஆலயங்களும், அக்ரஹாரங்களும் தடாகங்களும் நிர்மாணம்செய்தான்.

இவ்வாறு செங்கோல் செலுத்திவந்து 1573-ம் ஆண்டில் குமார கிருஷ்ணப்பநாயக்கன் மரணமடைந்தான்.

3 { கிருஷ்ணப்ப (பெரியவீரப்ப) நாயக்கன்
விசுவநாதநாயக்கன் II.

(1573—1595)

1573-ம் ஆண்டில் குமாரகிருஸ்ணப்பன் புதல்வர் கிருஷ்ணப்பன் என்ற பெரியவீரப்பனும் இரண்டாம் விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்குவந்தார்கள். ஆரியநாயகமுதலியே ராஜ்யகாரியங்களை நிர்வஹித்துவந்தார்.

மாவிலிவாணராஜன் கலஹம். மதுரையில் முன் அரசாண்டு வந்த மாவிலிவாணனது வம்சத்தவர்கள் காளையார்கோவிலில்குடியேறியிருந்தார்கள். அவர்கள் தங்கள் ராஜ்யத்தைக் கைப்பற்றக் கலஹம் செய்ததாகவும், கலஹம் அடக்கப்பட்டதாகவும் மாவிலிவாணராஜனுக்குத் தக்கசிக்ஷை செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. 1595-ல் கிருஷ்ணப்பனும் அதற்கு முன்னமேயே விசுவநாதனும் காலஞ்சென்றார்கள்.

4 { லிங்கய (குமாரகிருஷ்ணப்ப) நாயக்கன்
விசுவப்பன்என்றவிசுவநாதநாயக்கன் III.

(1595—1602.)

1595-ம் ஆண்டில் கிருஷ்ணப்பன் இறந்ததும் அவன் மக்கள் லிங்கயன் என்ற குமாரகிருஷ்ணப்பநாயக்கனும், விசுவப்பன் என்ற மூன்றும் விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்கு வந்தார்கள்.

1600-ம் ஆண்டில் ஆரியநாயகமுதலி மரணமடைந்தான். அவன் உள்ளவரை மதுராராஜ்யமானது கன்னியாகுமாரிமுதல் வடக்கே வாலிகோண்டபுரம் வரைக்கும் கிழக்கடல்முதல் மேற்குமலைத்தொடர் வரைக்கும் பரவியிருந்தது. மதுரை நாயக்கர்கள் விஜயநகரராஜ வம்சத்தவர் ஆதீனத்தைத் அங்கீகரித்தேவந்தார்கள். இவன் இறந்ததும் மதுரையின் ஸ்வாதீனம் அதிகரித்துவிட்டது. மதுரை ஆயிரக்கால் மண்டபம் அரியநாயகமுதலியால்தான் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. மதுரைப் பாளையக்காரர் ஏற்பாடு இவரால்தான் ஏற்பட்டது. மதுரைப் புதுமண்டபத்தில் இவர் உருவச்சிலையொன்று இருப்பதைப்பார்க்கலாம்.

1602. மதுரைப்பெருமாள்கோவில் வாயில்நிலைப்படியில் தோன்றும் சிலாநிரூபத்தால், விஜயநகர ஆதீனம் இன்னும் போகவில்லையென்று வெளியாகும்,

1602-ம் ஆண்டில் லிங்கயனும் அதற்குமுன்னமேயே விசுவநாதனும் காலஞ்சென்றார்கள்.

## 5. முத்துக்கிருஷ்ணப்பநாயக்கன்.

## (1602—1609).

1602-ம் ஆண்டில் லிங்கயன் இறந்ததும் அவன்மகன் முத்துக்கிருஷ்ணப்பன் பட்டத்துக்குரியவனாயினான். ஆயினும் முத்துக்கிருஷ்ணப்பன் சிற்றப்பன் கஸ்தூரிரெங்கயன் என்ற ஒருவன் மதுரை ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டான். முத்துக்கிருஷ்ணப்பன் நண்பரில் சிலர் இதையறிந்து, கஸ்தூரிரெங்கயனைப் பட்டத்துக்குவந்த ஒருவாரத்துக்கெல்லாம் கொலை செய்துவிட்டார்கள். பிறகு முத்துக்கிருஷ்ணப்பன் சந்ததிமுறைப்படி பட்டத்துக்கு வந்தான்.

**ஸேதுபதி ஸமஸ்தானம்.** ராமேசுவரம் என்பது தென்இந்தியாவில் கிழக்குக்கரையடுத்த ஓர் சிறு தீவு என்பதும், அது புண்யஸ்தலங்களில் ஒன்று என்பதும், ஸ்ரீஇராமன் இலங்கைமீது படையெடுத்துச் சென்றபோது இங்கேதங்கி ராமலிங்கஸ்வாமி ப்ரதிஷ்டை செய்தாரென்பதும், அதுமுதல் நமது இந்துதேசத்தில் பலவிடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் அனுதினமும் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் யாவரும் அறிந்தவிஷயம்.

நமது சரித்திரகாலத்திலும் அதற்குமுற்காலத்திலும் ராமநாதபுரம் சீமைமுழுதும் பெரியவனமாகவும், துஷ்டர்களும்,திருடர்களும், துஷ்டமிருகங்களும் வசிக்கும் இடமாகவும், யாத்ரிகர்களுக்குப் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. அப்படிப்பட்ட காட்டை முற்கால முதல் ஸேதுபதிஎன்ற சில தலைவர் காத்துவந்து, மதுரைப் பாண்டிய ஆட்சிக்குட்பட்டுக் கப்பமும் கட்டிவந்தார்கள்.

ஸேதுபதிராஜ்யத்தைப்பற்றிய சில சரித்திரக்குறிப்புக்கள் நெல்ஸன் துரையவர்கள் தன் மதுரை மான்யுவல் என்னும் நூலில் பின்வருமாறு வரைந்திருக்கின்றார்.

முதல் ஸேதுபதி இராமனால் நியமிக்கப்பட்டான். கரையோரமுள்ள வனப்ரதேசம் அவனுக்களிக்கப்பட்டது.

சோழன் ஒருவன் பாண்டியன்மீது படையெடுத்து வந்தபோது அதிவீரரகுநாதஸேதுபதி என்பவன் பாண்டியனுக்கு உதவியாயிருந்து சோழனைத்தோற்கச்செய்தான். அதற்குப்ரதிப்ரயோஜனமாகத்தொண்டித்துறைமுகம் ஸேதுபதிக்குப் பாண்டியனால் அளிக்கப்பட்டது.

கன்னடமன்னர் பாண்டியன்மீது படையெடுத்துவந்தபோது பரபீதிஸேதுபதி என்பவன் பாண்டியனுக்கு உதவியாய்ப் போர்புரிந்து கன்னடமன்னரைத் துரத்திப் பாண்டியவம்சப்ரதிஷ்டாபகன் என்ற பெயரும் பெற்றான். அக்காலத்தில் திருச்சுழி, பள்ளிமடம், திருப்புவனம் என்னும்நாடுகள் ஸேதுபதிக்கு விடப்பட்டன.

தெலுங்கர் சோழன்மீது படையெடுத்துச் சோழனைத்துரத்தியபோது சோழன் பாண்டியன் உதவிகேட்கப் பாண்டியன் வரதுங்கரகுநாதஸேதுபதியையனுப்ப, ஸேதுபதி தெலுங்கரை முறியடித்துத் துரத்திவிட்டு 'சோழவம்சஸ்தாபகன்' என்றபேர் பெற்றான்.

பின் ஒருக்கால் ஒரு சோழன் பாண்டியன்மீது படையெடுத்து வந்தபோது குலோத்துங்கரகுநாதஸேதுபதி என்பவன் அவனைத் தோற்கடித்துப் பட்டுக்கோட்டையையும், அரந்தாங்கியையும் பிடித்துத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டு, 'கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்' என்ற பேரும்பெற்றான்.

பின்பு சோழனுக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்த எல்லைவழக்கை ஸமரகோலாஹலரகுநாதஸேதுபதி என்பவன் ஒருவன் பக்ஷபாத

---

* குறிப்பு. ஸேது = அணை = ராமேசுவரம் போகும் அணை. பதி = காவலன். ஸேதுபதி = அணைக்காவலன்.

மன்னியில் தீர்த்து வைத்ததாகவும், அதற்குச்சோழன் மன்னார்கடல் முத்துச்சிலாபஉரிமையைச் சேதுபதிக்கு அளித்ததாகவும், ராஜ ராஜன் ராஜமார்த்தாண்டன், ராஜகம்பீரன் என்ற பெயர்கள் பாண்டிய னளித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

விஜயநகர ஸமஸ்தானச்சேனை மஹமதியர்மீது படையெடுத்த போது பாண்டியன் ஆணைப்படி ஸேதுபதி தனது மறவர்சேனையுடன் சென்று விஜயநகர அரசன்பக்கம் போர்புரிந்தான். அப்பொழுது மன்னார்கோவில், திருவாரூர், தேவகோட்டை என்னும்சீமைகளும் வானரக்கொடியும் கருடக்கொடியும் விருதாக அணியும் உரிமையும் சோழன் அளித்தான்.

இவைகளெல்லாம் ராமநாதபுரம்ஸமஸ்தானத்தில் உத்தேசம் 50வரு ஷங்களுக்குமுன் திவானாயிருந்த பொன்னுசாமித்தேவரால் கொடுக்கப் பட்ட குறிப்புக்கள். இவைகளின் உண்மையும்மற்றுமுள்ளவிவரங்களும் சரித்திர ஆராய்ச்சிகளால் விசேஷமாய் நிர்ணயிக்கப்படவேண்டியவை.

இதனால் நாம் முக்கியமாய் அறிவதாவது:-(1) சேதுபதிகள் வெகு காலமாய்ப் பாண்டியஅரசாட்சிக்குட்பட்ட சிற்றரசராகவேஇருந்திருக் கிறார்கள். எக்காலத்திலும் மறவர்கள் தென்இந்தியாவில் ஸ்வாதீன அர சர்களாயிருந்ததில்லை என்பதும். (2) 16-ம் நூற்றாண்டுத் துவக்கத்தில் விஜயநகர அரசரின் அதிகாரம் பெயருக்குமாத்திரமிருந்ததேயொழிய வேறல்ல. அக்காலத்தில் போகலூர் என்னும் ஊரில் சிற்றரசனாயிருந்த சடையத்தேவன் உடையான் என்பவனை முத்துக்கிருஷ்ணப்பன் ஸேது பதியாக ஸ்தாபித்தான். இவன் 72பாளையக்காரருக்கும் தலைவனானான். சடையத்தேவன் உற்சாகமாகவும் விசுவாஸத்துடனும் வேலைசெய்து கள்ளர்களையெல்லாம் அடக்கிப் பாதைகளெல்லாம் நிர்ப்பயமாக்கி, மதுரை ஸம்ஸ்தானத்துக்குக் காலந்தவறாது கப்பமும்கட்டிவந்தான். இவன்காலத்தில்தான் ராமநாதபுரம் கோட்டையும் கட்டப்பட்டது என்பதுமே.

முத்துக்கிருஷ்ணப்பன்காலத்தில் அநேக ஆலயங்களும், அக்ர ஹாரங்களும் தடாகங்களும், சாலைகளும் நிர்மாணம் செய்யப்பட்டன.

1609-ம் ஆண்டில் முத்துக்கிருஷ்ணப்பன் காலஞ்சென்றான்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

கடவுள் துணை.

# நட்பு.

---

நட்பாவது:- இருவர்மனம் வேற்றுமையின்றிக் கலத்தலாலுண்டாவதொரு சிறந்த குணமாம். அது கேண்மை, தொடர்பு, சிநேகம் முதலிய சொற்களாலும் வழங்கப்படும்.

இந்நட்பு, யாதொரு காரணமும்பற்றாது நிகழும் இயற்கையும், ஏதேனுமொரு காரணம்பற்றி உண்டாகும் செயற்கையும் என இருவகைப்படும்.

அவற்றுள், இயற்கையாவது: பெற்றார், பிறந்தார் முதலிய உறவினரிடத்து இயல்பாக நிகழும் மனப்பற்றும்.

செயற்கையாவது: ஒரு சம்பந்தமுமில்லாத அந்நியர்களோடு, அவர்கள் நற்குண நற்செய்கைளும், உபகாரசித்தமும் காரணமாக உண்டாகும் மனவொற்றுமையாம்.

இவ்விரண்டனுள், முன்னையது மானுடப்பிறப்பில் அறிவாளரிடத்தும், அறிவிலரிடத்தும் ஒப்பநிகழ்வதோடு, ஏனையவிலங்கு பறவைகளுட் சிலவற்றினிடத்தும் காணப்படுதலாலும், தாம் விரும்பி ஆராய்ந்துகொண்ட செயற்கைநட்புப்போல ஒருதலையாக நன்மை பயக்கும் சிறப்பில்லாமையாலும், அதனைச்சுற்றந்தழுவுதல், என வேறுபெயர்தந்து நிறுத்தி, அறிவினால் ஆராய்ந்துசெய்யப்பட்டு இம்மை மறுமைகட்கு உறுதிபயக்கும் சிறப்புவாய்ந்த செயற்கைநட்பினையே 'நட்பு' எனக்கொண்டு ஆராய்ந்து தெளிதல் பொருத்தமுடையதாம்.

அதுதான் உண்டாவதற்குக் கல்வி, செல்வம், அறிவு, ஒழுக்கம், வயது, ஜாதி, மதம் முதலிய பற்பல காரணங்கள் உள்ளனவாயினும், அவற்றையெல்லாம் தொகுத்துப், புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என மூன்றனுளடக்குவர் அறிவுடையோர்.

அம் மூன்றனுள், புணர்ச்சியென்பது: கல்விப்பயிற்சியும், உத்தியோகமும், வியாபாரமும், முதலியவைகாரணமாகப் பலர் ஓரிடத்து உடன்வசித்தலாம்.

பழகுதலென்பது: ஓரூரிலாயினும், ஒரு தேசத்திலாயினும், வெவ்வேறு ஊர்களிலாயினும், வெவ்வேறு தேசங்களிலாயினும் வசிப்பவர்தாம் ஒருவரையொருவர் அடுத்தடுத்துப் பலமுறை பார்த்தும் உசாவியும் மருவுதலாம்.

உணர்ச்சியொத்தலென்பது: மிக்க தூரத்திலுள்ள வெவ்வேறு தேசங்களில் வசிப்பவராயினும், மேற்கூறிய இரண்டுகாரணமும் வேண்டாது, கல்வி, அறிவு, ஒழுக்கங்கள் காரணமாக இருவர்மனம் எவ்வாற்றானும் பேதிக்கப்பெறாமல் ஒன்றுபடுதலாம்.

நட்பை உண்டாக்கும் இம்மூன்று காரணங்களுள், முதலிரண்டும்பற்றியுளவாகும் நட்புக்கள் அவ்வக்காரணங்கள் குறையுமிடத்து, எக்காலத்தும் நீரைவிரும்பும் கமுகமரமும், சிலவேளைகளில் நீரை விரும்பும் தென்னைமரமும் எவ்வாறு தமக்கு நீர்வார்த்தல் முதலிய உபசாரணைகுறையிற் பயன்றராதொழிகின்றனவோ ? அவைபோலப் பயன்றராதொழியினுமொழியும்; உணர்ச்சியொத்தலால் உளதாகும் நட்போவெனின், ஒரு காரணமும் வேண்டப்பெறாது நாளுக்குநாள் வளர்வதாய், உயிரையுங்கொடுத்துதவும் உரிமையைப் பயக்கின்றது. எனவே புணர்ச்சி, பழகுதல்களால் உண்டாகும் நட்பினும், உணர்ச்சியொத்தலால் உளதாகும் நட்பே சிறப்புடைத்தென்பது தெளிவாம். இக்கருத்தினை,

> "புணர்ச்சிபழகுதல்வேண்டாவுணர்ச்சிதான்
> நட்பாங்கிழமைதரும்"

என்ற பொய்யாமொழியார்வாக்காலும் நன்குணரலாம். ஆதலின் ஈண்டு எடுத்து விவரிக்கப்படும் 'நட்பும்' அதுவேயாகும்.

மனக்கலப்பு: நண்பர்களின் மனம் பாலுநீருங்கலந்தாற்போல ஒன்றுபட்டிருத்தல்வேண்டும். எங்ஙனமெனில், பாலும்நீரும் தம்முட் கலவாது தனித்தனியிருந்த நிலைமையில் ஒன்றற்கொன்று உதவாமலிருந்தும், இரண்டும் ஒன்றாகச்சேர்ந்தவிடத்து, பால்வேறு நீர் வேறு என்று அறியப்படாதவண்ணங் கலத்தலும், அங்ஙனம் நீரொடு கலந்த பாலைக்காய்ச்சுவதற்காக அடுப்பிலேற்றிச்சுடவைத்தபொழுது, கலப்புற்றநீர், தன் நண்பனாகிய பாலுக்குத்துன்பம்வருவதையுணர்ந்து, அந்நண்பன் றுயருறுவதைப்பார்க்க மனம் சகியாமல்

"பசைந்தாரிற்,றீர்தலிற்றீப்புகுதனன்று" என்பதை உட்கொண்டாற் போல, அப்பால்துயருறுவதற்கு முன்னமே அத்துயரத்தைத் தானேற்று இறந்துபடுவதும், அதுகண்டபால் அந் நண்பனதுபிரிவிற்காற்றாது, தானும் தீப்புகுந்துஉடனிறக்கக்கருதியதுபோலப் பொங்கி மேலெழுவதும், உடனே அயலவர் பாலினது நட்பின் பிரிவாற்றாமைக்கு இரங்கியவர்போல அப்பாலின்மீது நீர்தெளிக்கப் பின்னர் பால் கோபந்தணிந்து நண்பனோடுகலந்து சந்தோஷித்து வாழ்வதும் போல, தோழமைகொண்ட இருவர் வேற்றுமையின்றிக்கலந்து ஒருவர்க்கு நேர்ந்த சுகத்தை இருவர்க்கும் நேர்ந்ததாக நினைத்து அனுபவித்தும், அங்ஙனமே ஒருவர்க்குநேர்ந்த துன்பத்தை இருவர்க்கும் நேர்ந்ததாக நினைத்து விலக்கியும் ஒரு தன்மையராய் மனமகிழ்ச்சியுற வாழ்வதாம். இக்கருத்தை வெளிப்படுத்தும்,

"பாலினீர்தீயணுகப்பால்வெகுண்டுதீப்புகுந்து
மேலுநீர்கண்டமையுமேன்மைபோல்—நூலினெறி
யுற்றோரிடுக்கணுயிர்கொடுத்துமாற்றுவரே
மற்றோர்புகலமதித்து"

என்ற பெரியார்பாடல் பொன்போற் போற்றத்தக்கதாம்.

நட்பின்திட்பம்: இந்நட்பு மேற்கூறியபடி இருவர்மனம் ஒன்றாகக் கலத்தலால் உண்டாயினும், பின்னர் அக்கலப்புச் சற்று நெகிழ்ந்துகூடுமாயின், "நெல்லினுமிசிறிதுநீங்கிப்பழமைபோற் புல்லினுந்திண்மைநிலைபோம்" என்றபடி தன் ஆற்றல் குறையுமாதலால், அக்கலப்போடு அந்நெகிழாமைக்குக் காரணமாகிய உறுதிப்பாடும் உடைத்தாயிருத்தல்வேண்டும். அன்றியும், நண்பன்செய்த காரியங்களெல்லாவற்றையும் தான்செய்தனவாகவே கருதவும்வேண்டும். இதற்கு, சுக்கிரீவனைச்சந்தித்தகாலையில்,

"மற்றினியுரைப்பதென்னேவானிடைமண்ணினின்னைச்
செற்றவரென்னைச்செற்றார்தீயரேயெனினுநின்னோ
டுற்றவரெனக்குமுற்றாருன்கிளையெனதென்காதற்
சுற்றமுன்சுற்றம்நீயேயின்னுயிர்த்துணைவனென்றான்."

எனவும், விபீஷணன் தன்னைவந்தடைந்தபொழுது,

"குகனொடுமைவரானோம்வனத்திடைக்குன்றுசூழ்வான்
மகனொடுமறுவரானோம்வாரிதிகடந்தபிற்றை
யகனமர்காதலையநின்னொடுமெழுவரானோம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை"

எனவும், உறுதிமொழிகள்கூறி அவர்களோடு சிநேகங்கொண்ட ஸ்ரீராமபிரானது திண்ணியநட்பினையே உதாரணமாகக்காட்டல் சாலப் பொருத்தமுடையதாம்.

இனி, மிக்க நேசங்கொண்ட இருவர் தங்கள் நேசப்பான்மையை வியந்து, இவர் நம்மிடத்து இத்துணையன்புடையர்; நாம் இவரிடத்து இத்துணையன்புடையேம் என்று ஒருவரையொருவர் வேற்றுமை கருதாது புகழ்ந்துகூறினும், "இனையரிவரெமக்கின்னம்யாமென்று, புனையினும்புல்லென்னுநட்பு" என்றாங்கு, அப்புகழ்ச்சி ஒருகாலத்து வேறுபாட்டையுண்டுபண்ணி நட்பின்வலியைக் குறைக்குமாதலின், அங்ஙனம் புகழ்ந்துரைத்தலும் கூடாதென்பதாம்.

நட்பின் அருமை: இத்தகைய நட்பினைச்செய்துகொள்ளுதல் எளிதா? அரிதா? என்றாராய்வோமாயின், இக்காலத்துப்பெரும்பாலார், நட்புக்கொள்ளுதல் மிக எளிதென்றும், அதில் என்ன அருமைப்பாடுள்ளதென்றும் அலக்ஷியமாகப்பேசுவதை நாம் கேட்டிருக்கலாம். ஆனால், அங்ஙனம் கூறுவார்கொண்ட நட்பு எங்ஙனம் செய்துகொள்ளப்பட்டதென்பதையும், அங்ஙனம் செய்துகொண்ட நட்பின் உறுதியையும் கருதின், அது போஜனசாலையில் ஒருங்கு புசித்தலும், கல்லூரியிற்சிலகாலம்பயின்றதும், நாடகசாலைக்கு நண்பொடு செல்வதும், உத்தியோகத்தினில் உடனமர்ந்திருத்தலும், இன்னுஞ் சிலவற்றில் இணைபிரியாமையுங் காரணமாகச்செய்துகொள்ளப்பட்டதாகவே கருதப்படுகிறது. இவை காரணமாகப்பிறக்கும் நட்பு எவ்வளவிற் பயன்படுகிறதென்றால், ஒருவர்க்கொருவர் சிறிது பொருள் கடனாகக்கொடுத்துதவுதற்கும், வீண்பேச்சுப்பேசியும் சீட்டு சதுரங்கம் முதலியன ஆடியும் காலங்கழிப்பதற்குமே பயன்படுகிறது. அச் சிறுபயனும், கண்டவிடத்துமட்டுமே நிகழ்ந்து காணாவிடத்து நிகழாதொழியும். கண்டவிடத்திலும், அப் பொருளளவும், பழக்கமும் சற்று அதிகப்படுமானால் அதுபற்றிப் பயன்படாது அவரைவிட்டு நீங்கவும் நீங்கும். ஆதலின், எளிதிற்செய்யப்பட்டுப் பின்

நிலைபெறாதுநீங்கும் சிறியோர் தொடர்பைப்போல், ஆபத்துக்காலத் துதவுதலின்றிக் கண்டவிடத்து இன்மொழிகூறி முகமலர நட்கும் புறநட்பாகிப் பெரும்பயன்றராது நீங்குதலின் இங்ஙனம் எளிதிற் செய்யப்படும் நட்பு உண்மைநட்பாகாது.

நாம் கூறிய நட்போ, செயற்கரிய காரியங்களைச்செய்யும் பெரியோர் கைக்கொள்ளத்தக்கதாகலின், செய்துகொள்ளுதற்கு அருமையுடையதேயாகும். எங்ஙனமெனில், நட்புக்கொள்ளுதற்குரியவர்களைப் பல வழியினும் பன்முறையாராய்ந்து பெறுதலும், பெற்றால் அவர்களிடத்து நடந்துகொள்ளும் உபாயங்களையறிதலும், பின்னர், என்றும் மாறாதிருத்தலும் அரிதாதலானென்க.

ஆனால், இவ்வளவு அருமைப்பாடுள்ளநட்பை யாவருங்கைக் கொள்ளுதல் எங்ஙனமெனில், "தொடங்குங்கால் துன்பமாயின்பம் பயக்கும்" கல்வியின் அருமைகருதி அதனைவேண்டாமென்றொழியாது, எவ்வாறு அதன்பயன்கருதி யாவரும் கற்கவிருப்பங்கொள்ளுகின்றனரோ, அதுபோல, இந் நட்பினையும் செய்தற்கருமைபற்றி வெறுக்காது விரும்பிக்கைக்கொள்ளுதல் வேண்டும். கொண்டால், அது பின் பெரும்பயனைக்கொடுத்துத் தன்னைப்பாதுகாப்பதில் தனக்கு நிகரில்லாது விளங்குமென்பது நிச்சயம்.

"செயற்கரியயாவுளநட்பினதுபோல்
வினைக்கரியயாவுளகாப்பு"

என்பதுமதனை வலியுறுத்தும்.

நட்பினரைத்தெரிதல்: நம்முடன் பழகுவோரனைவரையும் நட்பினரென்றே சொல்லுதல் வழக்கம். ஆனால், பலருடன் பன்முறை பழகினாலும், அப்பலருள்ளும், நமது லாபநஷ்டங்களைத் தனதெனக் கருதும் உண்மையான நண்பனொருவனைப்பெறுதல் மிகவும் அரிதாகவிருக்கின்றது. ஆதலால், ஒருவரோடு சிநேகங்கொள்ளுவதற்கு முன்னதாகவே அவர் குணங்களையும் செயல்களையும் ஆராய்ந்துகொள்ளவேண்டும். சிநேகங்கொண்டபின், நாளடைவில் ஆராய்ந்து தெளிந்தாலென்னையெனின்; சிநேகித்தபின், தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி, அவர் செய்த காரியங்களைத் தான் செய்தன

வாகக்கருதும் உரிமையுண்டாய்விடும். உண்டாகவே, அவர் தீக்குணமுள்ளவராயிருப்பின்; அவர் செய்யும் தீச்செயல்களின் பயன் தன்னையுஞ்சார்ந்து, இம்மையில் அரசர் முதலியோராலும், மறுமையில் அறக்கடவுளாலும் ஏற்படுந்துன்பங்களைத் தானுமனுபவிக்க நேரும். அம்மட்டோ? அத்துடன் இருமைப்பயன்களையிழக்கவும் நேருகின்றது. ஆதலின் சிநேகித்தபின் ஆராய்வது கூடாதென்பதை,

> "எண்ணித் துணிககருமந் துணிந்தபின்
> எண்ணுவமென்பதிழுக்கு."

> "நாடாது நட்டலிற்கேடில்லைநட்டபின்
> வீடில்லைநட்பாள்பவர்க்கு."

> "ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மைகடைமுறை
> தான்சாந்துயரந்தரும்."

என்னும் தமிழ்வேதவாக்கியங்களால் நன்குணர்க.

இனி, அவர்களையாராயுங்கால், நல்லறிவுள்ளவரா? நற்குடியிற் பிறந்தவரா? நல்லவர்களோடு சினேகங்கொண்டவரா? ஏதேனும் பயனைக்கருதி அப்பயன் பெறுமளவும் சிநேகங்காட்டுபவரா? அன்றி நிலைபெறும் நட்பிற்குரியவரா? தன் பகைவர்களாலனுப்பப்பட்டுத் தன்னிடத்து இரகசியங்களையறிவதனிமித்தம் சிநேகங்காட்டுபவரா? தன்னிடத்துள்ள உரிமைப்பொருள்களை யபகரிப்பதற்கெண்ணிச் சிநேகிக்கவந்தவரா? இவரிடத்து எத்துணைக் குற்றமுள்ளன? என அவரது நன்மையையுந் தீமையையும் அவ்வவற்றிற்குத்தக்க உபாயங்களால் நன்காராய்ந்து தெளிந்து, பொறுக்கக்கூடியவையும், திருத்தக்கூடியவையுமான சில குற்றங்கள் காணப்படின், அது கருதிவிட்டுவிடாது நற்குணங்களின் மிகுதியே காரணமாக அவர்களோடுநட்புக் கொள்ளல்வேண்டும். இதுபற்றி,

> "குணனுங்குடிமையுங்குற்றமுங்குன்றா
> இனனுமறிந்தியாக்கநட்பு." எனவும்,

> "நன்மதியுடைமைகுடிகுணங்குற்றநல்வினத்தானுமெத்திறத்தும்
> பன்முறையாய்ந்துநட்பினைக்கொள்க".

எனவும் கூறிய ஆன்றோர் செய்யுளும் ஆராயத்தக்கன.

நட்பிற்குரியவர்:-மேற்கூறியமுறையாக ஆராய்ந்து நட்புக்கொள்ளுதற்குரியவர்கள்; கல்வி, அறிவுநுட்பம், நல்லொழுக்கம், ஈசுவரபக்தி, சாந்தம், ஹிதவசனம், நல்லிணக்கம், உபகாரசித்தம், ஜீவகாருண்யம், பொறுமை முதலிய நற்குணவான்களென்று தெளிதல்வேண்டும். இக்குணங்கள் கருதாது செல்வமுடைமையொன்றேகருதிச் சிநேகிக்க விரும்புதல் கூடாது. ஏனெனில், பொருட்குறைவுள்ள சிநேகிதர்கள் செல்வநட்பாளரை மிகவும் நன்குமதித்துத் தன் வீட்டிற்கழைத்துச் சென்று உபசரிப்பதோடு, தமது தாய்தந்தையர்கள், மனைவிமக்கள் முதலியோரை அறிமுகஞ்செய்வித்து உரிமைபாராட்டுதலும்; செல்வர்கள் அந்நட்பினர் தாமே தங்கள் வீட்டிற்கு வந்தபொழுதும், அவர்களைப்பொருட்படுத்தாமலும், தம் மனைவிமக்களை அவர்கள் கண்டாலும் கற்பழிந்துவிடுமென்றெண்ணியும் பெருந்தன்மையிழந்தவர்களாய், ஒரு குலத்தவராயினும் அவர்களோடு பந்திபோஜனம் செய்வதும் தமக்குக் குறைவெனக்கருதிப் புறங்கடையில் வைத்து உணவளித்தலும் உண்மையாமெனக. இதனைக் கண்கூடாக அறிந்த அறிஞர்கள்,

“யாமாயினெம்மில்லங்காட்டுதுந்தாமாயின்
காணவேகற்பழியுமென்பார்போல்—நாணிப்
புறங்கடைவைத்தீவர்சோறுமதனால்
மறந்திடுகசெல்வர்தொடர்பு.” எனவும்,

“யானையனையவர்நண்பொரீஇநாயனையார்
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும்பாகனையேகொல்லுமெறிந்தவேல்
மெய்யதாவால்குழைக்குநாய்.”

எனவும், பரிந்துகூறியவற்றால், சிநேகமுணமற்ற செல்வர்களின் தொடர்பு கனவிலும் நினைக்கத்தக்கதன்றென்பது விளங்குகின்றது.

பெரியவர்நட்பு:—இங்ஙனம் பல்லாற்றானும் ஆராய்ந்து பெருந்தகையாளரையே சிநேகிக்கவேண்டும். அப்பெரியவர் கேண்மை: குறைந்த ஒளியுள்ள பிறைச்சந்திரனும், மாலைக்காலத்து நிழலும் போல ஆரம்பத்தில் சிறுங்குவதாகக்காணப்பட்டு வரவரப் பெருகுமியல்பினையும், அறிவுநூற்பொருள்கள் கற்குந்தோறுமின்பந்தருதல்

போலப் பழகுந்தோறுமின்பமளித்தலையும், மரஞ்செடிகளிற் புஷ்பிக்கும் மலர்கள் மலர்ந்தபின் குவியாதவாறுபோல முன்விரிந்து பின் சுருங்காமையையும், வயல் தூரத்திலிருப்பினும் நீரொடுசென்று அதை விளைவிக்கும் நீர்வாய்க்கால்போல நண்பன் தூரதேசத்திலிருப்பினும் பொருளொடுசென்று அவனுக்குதவிசெய்தலையும், நிலத்திலூன்றப் பெற்றதையொழிய வேறுபகாரத்தைப்பின் அடையாதிருந்தும், பனைமரமானது, அதுகருதாது, ஒருநாட்பழக்கங் காரணமாக அந் நட்டார்க்குத் தானுள்ளளவும் பயன்படுதல்போல, சிநேகிதரிடத்து அடிக்கடி உதவியை எதிர்பாராது, 'ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை, யிருநிலம்பிளக்க வேர்வீழ்க்கும்மே' என்றபடி நிலைபெறெய்தி அந்நட்டார்க்குதவிசெய்தலையும், ஒரு குளத்திலுள்ள கொட்டி, நெய்தல், ஆம்பல் முதலிய கொடிகள் குளம் நீர்நிறைந்த காலத்துத் தாம் செழித்தும், நீர்வற்றியகாலத்துத் தாம் புலர்ந்தும் உறவுகொள்வதுபோல நண்பன் இன்புற்றகாலத்துத் தான் மகிழ்வதும் துன்புற்றகாலத்துத் தான் வருந்துவதும் ஆகிய உரிமையையும் தனக்கு இயல்பாகக்கொண்டு இருவர்க்கும் இருமையிலும் இன்பம் பயக்குந்தன்மையுடையதாம்.

சிறியவர்நட்போவெனின், பூர்ணசந்திரனும் காலைநிழலும் போலத் தொடக்கத்தில் விரிவாகக்காணப்பட்டுப் பின் வரவரச் சுருங்குதலையும்; மரஞ்செடிகளிற்றோன்றும் தளிர்கள் நாள் செல்லச் செல்ல ஒளியும் மென்மையும் குறைந்து வற்றுதல்போல முன் பளபளப்புக்காட்டிப் பின்மறைதலையும், நீரிலுண்டாகும் மலர்கள்போல முன்மலர்ந்து பின் குவிதலையும், கமுகு முதலிய விருக்ஷங்களைப்போல எப்பொழுதும் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்து அவ்வுதவி சிறிதுகுறையினும் தான் பயன்படாதொழிதலையும், பலவருஷங்கள் பழகினும் நீரின்கட் பாசிபோல வேரூன்றாமையையும், குளம் நீர் வற்றியகாலத்து அங்குள்ள பறவைகள் நீங்குவதுபோல நண்பன் வறுமையுற்றகாலத்து அவனைவிட்டு நீங்குதலையும், கரும்பை அடிப் பக்கத்திருந்து தின்றாற்போல வரவரப் பிரியங்குறைதலையும் தனக்கியல்பாகக்கொண்டு பயன்படாமையின் அதன் சிறுமையறிந்து அந் நட்பினைக்கொள்ளாமை வேண்டும்.

நட்பினர்கடமை:—மனமொன்றுபடக்கலந்த நண்பர்கள் ஒவ்வொருவரும் தம் சிநேகிதரைக்கண்டவிடத்து, சூரியோதயங்கண்ட தாமரைமலரும், சந்திரோதயங்கண்ட சமுத்திரமும்போல உள்ளும் புறமும் ஒருங்கு மகிழ்தலும், ஒருவர் மிகுந்த காரியங்களுள்ளவராயிருந்தால் அக்காரியங்களைத் தாமும் உடனிருந்து செய்து முடித்தலும், ஒருவர்க்கொருதுன்பம் நேரிட்டகாலத்துப் பரபரப்போடு விரைந்துசென்று அத்துன்பத்தை நீக்குதலும், நீக்கமுடியாத ஊழ்வினை காரணமாகவந்ததுன்பமாயின் தாமும் உடனனுபவித்தலும், நண்பர் சன்மார்க்கத்தினின்றும் விலகித் துன்மார்க்கத்திற் செல்லக் கண்டால் அதனால் வருந்துன்பம் தமதெனக்கருதி இன்சொற்களால் ஆவன கூறியும், அவை பயன்படாக்கால் வன்சொற்களால் இடித்துரைத்தும், அவரைத் துன்மார்க்கத்திற் செல்லவொட்டாது தடுத்தலும், சமயநேரிடுங்கால், உடல்,பொருள், ஆவி மூன்றையுங் கொடுத்துதவப் பின்வாங்காமையும் முதலிய உரிமைகளைத் தங்களுக்குச் சிறந்த கடமையெனக் கொள்ளுதல்வேண்டும்.

"முகநகநட்பது நட்பன்றுநெஞ்சத்
அகநகநட்பது நட்பு."

"நகுதற்பொருட்டன்றுநட்டல்மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற்பொருட்டு."

"உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
இடுக்கண்களைவதாநட்பு."

"அழிவினவைநீக்கியாறுய்த்தழிவின்கண்
அல்லலுழப்பதாநட்பு."

அழிதருநெறியிற்செலவினைவிலக்கி
யாம்வழிச்செலுத்தியூழ்வினையால்
அழிவுவந்தெய்பினதற்குடனல்லாந்
தாக்கைவேறன்றியாருயிர்கள்
ஒழிவகையின்றியுணர்ச்சியொத்தருந
லுணர்தொறுமுறுநயம்போலக்
கழிமகிழ்நாளும்பயிற்றும் வளரக்
கலப்பதேநட்பெனப்படுமால்.

என்பனவும் நட்பின்கடமையை நன்குவிளக்கும்.

நட்பினின்றியமையாமையும் பயனும்:- இந்நட்பினைத் தேடிக் கொள்ளுதல் அவசியந்தானா?என்றால்,மிகவும் அவசியமே.ஏனெனில், உலகத்தில் எந்தவருணத்திற் பிறந்தவராயினும், எந்த ஆசிரமத்தி லிருப்பவராயினும், தத்தம் வருணாச்சிரமங்கட்கேற்ப அறம்பொரு ளின்பங்களைக் கைக்கொண்டு உலகவாழ்க்கையிற் பொருந்துதல் ஒரு தலையாம். அங்ஙனம் உலகவாழ்வை மேற்கொண்டவர்களுக்கு, அவ்வாழ்க்கை இனிது நிறைவேறப் பிறருதவி வேண்டத்தக்கதாம். அங்ஙனமாயின், நான்காம் நிலையிலுள்ள துறவிகளுக்குப் பிறருதவி வேண்டாமேயெனின், அவர் துறவறங்கடைபோதற்கு வேண்டப்படு மென்பதை "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கும், நல் லாற்றினின்ற துணை" என்பதால் அறிக. வேண்டவே அவ்வக் காலத்துச் சிற்சில உதவிகளைச்செய்ய வல்லசிநேகரைப்பெறுவதிலும் என்றும் நமக்குதவிசெய்யும் நட்பினரைத் தெரிந்துகொள்ளுதல் சிறப்புடையது.

மேலும், ஒருவனுக்கு உள்ளத்தில் கவலையேனும் சந்தோஷ மேனும் அதிகரித்தவிடத்துப் பிறருடன் சொல்லி ஆறுதலடைய வேண்டும். எங்ஙனமெனில், துன்பமதிகரித்தவிடத்து அத்துன்பத் தைப் பிறரிடம் சொன்னால், இயல்பாகவே அது குறைதலோடு, அவர்கள் அதனைத் தீர்க்கமுடிந்தால் தீர்க்கவும் முடியாவிடத்து ஆற்றவுங்கூடுமாதலாலும்,சந்தோஷத்தை நண்பர்களிடம்சொன்னால் அது மென்மேலும் பெருகுமாதலாலும், துன்பநிவிர்த்திக்கும் இன் பப்பெருக்கிற்கும் உரியவர் நட்பாளராதலின் அவரோடு நட்புக் கொண்டு வாழ்வதே சிறந்ததாம். இது உலகில் வறியவன்முதல் அரசன்வரையுமுள்ள எல்லார்க்கும் இன்றியமையாததொன்றாம்.

இந்நட்பின் அவசியத்தை உலகிற்கறிவிக்கக்கருதிக் கடவுளரும் நட்புக்கொண்டு காட்டினரென்பதைக், கண்ணபிரான் குசேலரோடும் அர்ச்சுனனோடும் நட்புக்கொண்டு அவர்க்குதவிய செயல்களாலும், பரமசிவன் குபேரனோடும் சுந்தரமூர்த்திநாயனாரோடும் நட்புக் கொண்டு அவர்க்கருளிய முறைமையாலும் நன்கு தெளியலாம். "அரனது தோழன்," "தம்பிரான்றோழர்," என்னும் அந்நண்பர் களின்பெயர்களும் இதனை ஞாபகப்படுத்தும்.

இனி, இந்நட்பின் பயனைச் சுருங்கக்கூறுமிடத்து, ஒருவன் இம்மைக்குறுதியாகிய பொருளைச்சம்பாதிப்பதிலும், மறுமைக்கேதுவாகிய அறத்தைச்செய்வதிலும் தளர்ச்சியுற்றுழி, அத்தளர்ச்சியினீக்கி அவனை அவற்றில் நிலைபெறச்செய்து இருமைப்பயனையும் எய்துவிக்குமென்பதாம். செய்யத்தக்கது இதனினும் சிறந்ததொன்றின்மையின் இதுவே சிறந்தபயனும். இக்கருத்தடங்கிய,

> "நட்பிற்குவீற்றிருக்கையாதெனிற்கொட்பின்றி
> ஒல்லும்வாயூன்றுநிலை".

என்னும் குறளின்பொருள் சிந்திக்கத்தக்கதாம்.

நட்பிற்பிரிவாற்றாமை:- நண்பர் ஒருவரையொருவர் பிரியநேர்ந்தால் அதுவே பெருந்துயரத்தை விளைவிப்பதாகும். அப்பிரிவு: சிநேகப்பிரிவும், நண்பர் லோகாந்தரங்களுக்குச் செல்லநேரின், அதுபற்றியுளவாகும் பிரிவும் என இருவகைப்படும். இவ்விருவகைப் பிரிவினும் உண்டாவது வருத்தமேயன்றிவேறில்லை. நட்புக்கொண்ட இருவர் எக்காரணம்பற்றியாவது நட்பினையிழக்க நேருமாயின், அவர்கள் தனித்திருந்து அப்பிரிவை நினைக்க நினைக்க அது மனதைச்சுட்டு வருத்துதலைத் தாம் அனுபவித்த சிலர் பிறரிடத்தும் கூறுவதை அநேகர் கேட்டிருக்கலாம். சிநேகிதரைப்பிரிந்து வருந்தியதற்கு, ஔவைப்பிராட்டி, கபிலர் முதலிய அறிவிற்சிறந்தோர்கள் தாங்கள் நட்புக்கொண்ட அரசர்களையும், புலவர்களையும் இழக்கநேர்ந்தசமயத்து ஆற்றாது வருந்திப்பாடிய வரலாற்றைப், 'புறநானூறு' முதலிய பழையநூல்களிற் பரக்கக்காணலாம்.

> "பேயோடுபழகுறினும்பிரிவதரிதரிது" எனவும்,
>
> "விலங்கிற்கும்விள்ளலரிது" எனவும்,
>
> "பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னு
> மரீஇப்பின்னைப்பிரிவு". எனவும்,
>
> "பசைந்தாரிற்றீர்தலிற்றீப்புகுதனன்று".

எனவும், கூறிய ஆன்றோர்வாய்மொழிகளும் சான்றுதலறிக.

நட்பிற்பிழைபொறுத்தல்:-நண்பன் தன்னிடத்து முறை தவறி நடத்தலும், தன்னைக்கேளாமலே தன் பொருளையெடுத்துச் செல

விடலும், தன் காரியங்களைத் தன்னனுமதியின்றிச்செய்தலும், முதலிய தவறுகளைச்செய்வானுயின், உடனே அவன்மீது கோபங்கொள்ளாது, அவை அறியாமைகாரணமாகச் செய்யப்பட்டனவென்றுவது, உரிமைமிகுதியாற் செய்யப்பட்டனவென்றுவது கொள்ளுதல்வேண்டும். அச் செயல்கள் தீங்கிற்கேதுவாயிருப்பின், இதமாகச்சொல்லித் தடுத்தலும்வேண்டும். இனி, தனக்குத்துன்பமிகுதியைப்பயக்கும் செயல்களைச்செய்தால், அப்பொழுதும் பொறுமையைவிடாது, ஊழ்வினை காரணமாகவரும் பேதைமை யாவர்க்குமுள்ளது எனவும்,ஊழ்வினைகாரணமாகத் தானனுபவிக்கவேண்டிய துன்பம் அவன்மூலமாக வந்ததேயன்றி அவன் வேண்டுமென்று செய்யவில்லையெனவும்,

"பேதைமையொன்றோபெருங்கிழமையென்றுணர்க
நோதக்கநட்டார்செயின்."

"நல்லாரெனத்தானனிவிரும்பிக்கொண்டாரை
யல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டும்
நெல்லுக்குமியுண்டுநீர்க்குநுரையுண்டு
புல்லிதழ்பூவிற்குமுண்டு."

"இன்னுசெயினும்விடுதற்கரியாரைத்
துன்னுத்துறத்தறகுவதோ."

எனக்கூறிய முதுமொழிகளாற்றெளிந்து சமாதானமடைதல் வேண்டும்.

ஆனல், தனக்குத்தெரியாமலும், சொல்லியும் கேளாமலும் துன்புறுத்தலையே மேற்கொண்டவிடத்துச்செய்வதென்னையெனின்,

"ஆற்றுந்துணையும்பொறுக்கபொருணுயின்
தூற்றுதேதூரவிடல்"

என்பதையுட்கொண்டு, தன்னுலியன்ற அளவும் பொறுத்துப் பொறுக்கமுடியாதநிலையில், அவனையிழித்துரைக்காமலும், அவன்குறைகளைப் பிறரிடங்கூறுமலும், அவனுக்குத்தீங்குசெய்யாமலும் தான் விலகிக்கொள்வதே முறையாகும்.

நட்பில் உயிர்துறத்தல்:— உடலிரண்டும் உயிரொன்றுமாகக் கலந்தநண்பருள்,ஒருவர் இறந்தனராயின், மற்றவரும் உலகவாழ்வை வெறுத்து நண்பருடன்செல்லுதல் மரபு. இங்ஙனம் நண்பர்பால்

உயிரையும் பொருட்படுத்தாதொழுகினமைக்குப், பாண்டிநாட்டி லுள்ள பிசிர் என்னும் ஊரிலிருந்தமையாற் பிசிராந்தையார் என்னும் பெயர்பூண்ட புலவரொருவர், சோழநாட்டு உறையூரில் அரசுசெ லுத்திவந்த கோப்பெருஞ்சோழனோடு, புணர்ச்சி, பழகுதல் முதலிய காரணங்களொன்றுமின்றி, அவனது கல்வி, ஒழுக்கம், செங்கோன் மை, முதலிய குணங்களைக்கேட்டுணர்ந்த உணர்ச்சிகாரணமாகவே நட்புக்கொண்டொழுகுநாளில், சோழன் உலகவாழ்வை வெறுத்து நற்கதியினிமித்தம் உயிர்துறக்கத்துணிந்ததைக் கேள்வியுற்ற புலவர் உடனே உறையூர்சென்று தானுமவ்வரசனுடன் உயிர் துறந்த வரலாற்றை,

"நினைக்குங்காலைமருட்கையுடைத்தே
யெனைப்பெருஞ்சிறப்பினோடீங்கிதுதுணிதல்
அதனினுமருட்கையுடைத்தேபிறனாட்டுத்
தோற்றஞ்சான்றசான்றோன்போற்றி
யிசைமரபாகநட்புக்கந்தாக
இனையதோர்காலையீங்குவருதல்
வருவனென்றகோனதுபெருமையும்
அதுபழுதின்றிவந்தவனறிவும்
வியத்தொறும்வியத்தொறும்வியப்பிறந்தன்றே
அதனால், தன்கோலியங்காத்தேயத்துறையும்
சான்றோனெஞ்சுறப்பெற்றதொன்றிசை
யன்னோனையிழந்தவிவ்வுலகம்
என்னாவதுகொலளியதுதானே."

என்னும் புறப்பாட்டானும்,

பொத்தியென்னும் புலவர் கோப்பெருஞ்சோழன் இறக்கத் துணிந்தநிலையில், தானும் உடன்செல்லக்கருதவே, அதையறிந்த சோழன், நீர் புத்திரனைப்பெற்றபின் வரலாமென்றுகூற, அந் நண்ப ரின் சொல்லைக்கடவாதொழுகிப், புத்திரப்பேறடைந்தபின் நடுகல்லா யிருந்த சோழனிடம் சென்று நான் புத்திரனைப்பெற்றுவந்தேன்,நண் பினைமறவாது எனக்கிடந்தரவேண்டுமென்று கேட்க, அந் நடுகல் பிளந்திடங்கொடுத்த அளவில் அப்புலவர் அதனுட்சென்று தங்கின வரலாற்றை அப்புலவர்கூறிய,

“பலர்க்குநிழலாகியுலகமீக்கூறித்
தலைபோகன்மையிற்சிறுவழிமடங்கி
நிலைபெறுநடுகலாகியக்கண்ணும்
இடங்கொடுத்தளியமன்றவுடம்போ
டின்னுயிர்விரும்புங்கிழமைத்
தொன்னட்புடையோர்தம்முழைச்செலினே.”

என்னும் செய்யுளானும்,

தசரதச்சக்கரவர்த்தி உயிர்நீத்ததையறிந்த சடாயு நட்புரிமை பற்றி நெருப்பிற்குதித்து உயிர்துறக்கத்துணிந்ததை,

“மருவினியகுணத்தவரையிருசிறகாலுறத்தழுவிமக்காணீரே
யுரியகடன்வினையேற்குமுதவுவீருடலிரண்டுக்குயிரொன்றானான்
பிரியவுந்தான்பிரியாதேயினிதிருக்குமுடற்பொறையாம்பீழைபாரா
தெரியதனிலின்றேபுக்கிறவேனேலித்துயரமறவேனென்றான்”.

என்னும் கம்பர்வாக்கானும் நன்கறிந்து உதாரணமாகக்கொள்ளுதல் பொருத்தமுடையதாம். இன்னும் இத்தகைய சான்றுகள் பல காட்டலாமாயினும், விரியுமென்றுவிடப்பட்டன. இன்னோர் சரிதங்களால் உயிரினுஞ்சிறந்தது நட்புரிமையென்பது விளங்குகின்றது.

கூடாநட்பு:- இந்நட்பினை யெதிர்மறை முகத்தாலாராயின், நட்பின்பயனைக் கருதாது தான் பெறத்தக்க பயனையே நாடுகின்றவர்கள் நட்பானது: தமக்குப் பொருள்கொடுப்போரைக் கருதாது அவர்கள் கொடுக்கும் விலைப்பொருளையே கருதும் வேசையர்களையும், பொருளுடையாரது கேட்டைக்கருதாது அவர் சோர்வுபார்த்து அபகரிக்கக்கருதும் கள்வரையும் ஒக்குமாதலால் அத்தன்மையரோடும், உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவோரோடும், கள், காமம், சூது, பொய்க்கரிகூறல், புறங்கூறல், முதலியன கைக்கொண்டொழுகும் அறிவிலிகளோடும், நட்புக்கொள்ளாமை வேண்டும்.

இத்தகையரோடு நட்புக்கொள்ளாது விலகுதல் தமக்குப் பெரியதோ ரூதியமென்றும் கருதல்வேண்டும். இவை,

"உறுவதுசீர் தூக்குநட்பும்பெறுவது
கொள்வாருங்கள்வருநேர்."

"கனவினுமின்னாதுமன்னோவினைவேறு
சொல்வேறுபட்டார்தொடர்பு."

"புறநட்டகம்வேர்ப்பார்நச்சுப்பகைமை
வெளியிட்டுவேறுதல்வேண்டும்."

"ஊதியமென்பதொருவற்குப்பேதையார்
கேண்மையொரீஇவிடல்."

என்ற செய்யுட்களாலும் நன்குவிளங்கும்.

இத்தீயாரோடு சிநேகங்கொண்டு இருமைப்பயனுமிழந்தமைக்கு, சகுனியோடு நட்புக்கொண்டு இம்மையில் நாடு நகரம் பெண்டிர் பிள்ளை சுற்றம் முதலிய நன்மைகளையிழந்து, மறுமையிலும் நரகத்திற் காளாகிய துரியோதனனையும், கட்டியங்காரனோடு நட்புக்கொண்டு நாடு முதலியவற்றையிழந்ததோடு, பூர்ணகர்ப்பிணியாகிய மனைவியை மயிற்பொறியேற்றி வெளிப்படுத்திவிட்டுத் தன்னுயிரையும் இழந்த ஏமாங்கதநாட்டுச் சச்சந்தமஹாராஜனையும் இலக்கியமாகக் காட்டலாம்.

முடிவுரை:-அன்பர்களே! இதுகாறும் நட்பு இன்னதென்பதும், இத்தனைவகைத்தென்பதும், அதனிலக்கணமும், செய்யுமுறையும், செய்தால் திரிபின்றிநிற்றலும், அதன் உறுதிப்பாடும், அதனையாராயுந் திறமும், அது செய்தற்குரியாரிவரென்பதும், பெரியவர்கேண்மையின் பெருமையும், சிறியவர்கேண்மையின் சிறுமையும், நட்பினின்றியமையாமையும், அதன்பயனும், அதுஉயிரினும் சிறந்ததென்

பதும், நட்பிற் பிழைபொறுத்தலும், நட்கத்தகாதாரியல்பும், நல்லோர் நட்பின்பயனும் என்பனவாகப் பலவகைப்படுத்தி ஒருவர்று நட்பின் பெருமையுரைக்கப்பட்டது.

இதனையின்னும்விரித்துநயம்படவுரைப்பர் அறிவாளர்.

இத்தகையநட்பினும் சிறந்ததொன்றில்லையாகையால் நாமெல்லோரும் ஒருவரோடொருவர் பழகுங்கால், உள்ளன்போடு நட்புக்குணமதிகரிக்கும்படி பழகியும், நம்மிளைஞர்களை அவ்வழியிற் பழக்கியும் வருதல்வேண்டும். வருவோமாயின், இந்நட்பு வரவர விரிந்து தேசமுழுதும் பரவி ஒற்றுமையை ஊன்றச்செய்யும். செய்யவே, இப்பொழுது இந்தியர் நட்புக்குணமில்லாமையால் தங்கள் உரிமைகளையிழந்திருக்கின்றனரென்று கூறப்படும் வசைச்சொல்லினின்றும் நீங்கினவர்களாவோம்.

ஆதலின், இந்நட்பினை ஊராரிடத்தும், நாட்டாரிடத்தும், தேசத்தாரிடத்தும், தந்நலமறந்து தேசநன்மைக்கே உழைக்கும் உத்தமர்களிடத்தும், நமக்குப்பல நன்மைகளையும் செய்துவரும் அரசரிடத்தும் முறையேசெய்து, நாம் நமக்கும் தேசத்துக்கும் நண்பினராவோமாக.

சுபமஸ்து.

சு. ஹரிஹரையர்,

உபாத்தியாயர்,

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

# நெற்குன்றைவாணமுதலியார்.

தமிழ்கற்க ஆரம்பஞ்செய்வோர், முன்னாளில், முதலில் திருப்புகலூர் அந்தாதி, திருச்செந்திலந்தாதி, மறைசையந்தாதிமுதலியனகற்றே பின்னர்க் காவியபாடம்படித்தல் மரபு. இவற்றில், திருப்புகலூரந்தாதியியற்றினார் நெற்குன்றைவாணமுதலியாரென்பது. நெற்குன்றைவாணர் என்பது ஒருபெயரெனக்கொண்டு இதுகாறும் எண்ணிவந்தோம். ஆயினும் ஆராய்ச்சியால் அவர் இயற்பெயர் வேறு என்றும், நெற்குன்றம் என்னு மூரைஉடையார் என்றும், பின்னர் அரசனால் வேண்டப்பட்டுச் சோணாடுபுக்குத் திருப்புகலூரில், தம் காலத்தைக் கழித்தனரென்றும், அக்காலத்தில் திருப்புகலூரந்தாதி பாடினரென்றும் அறியக்கிடக்கின்றன.

தொண்டைமண்டலசதகத்திலே,

> இளப்பார் இளப்ப வடிமடிக் காகக் கெழுமியசொல்
> வளப்பா மதுரத் துடன்பூக் கமலமென் றுய்ந்தெடுத்த
> களப்பாள னெற்குன்ற வாணனந் தாதிக் கலித்துறையே
> வளப்பார் புகழை வளர்ப்பிக்கு மாற்றொண்டை மண்டலமே.

[ரிப்பன்பிரஸ் பிரதி 26-வது செய்யுள்.]

என்று காணப்படுவதால், களப்பாளனென்பது அவர்இயற்பெயரென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. நெற்குன்றமென்னுமூருக்கு அரசனெனப் பொருள்படும். வாணன், அரசனென அகராதியிற்காணப்படுகிறது. இவரதுஊர் தொண்டைநாட்டுள்ள நெற்குன்றம் தானென்பதும், இயற்பெயர் களப்பாளர் என்பதும் திருப்புகலூரிலுள்ள ஸ்ரீ அக்னிபுரீசுவரசுவாமிகோவில் உள்பிரகாரம் வடபுறச்சுவரில்வெட்டப்பட்டிருக்கும் "ஸ்வஸ்திஸ்ரீ சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு ௰௯வதுமிதுநநாயிற்று பூர்வபக்ஷத்து அத்தத்துநாள்குலோத்துங்கசோழ வளநாட்டு பனையூர்நாட்டு ப்ரஹ்மதேயத்து தேவலோகம்........மகாசபையோம் இறையிலிநிலம் விலை ஆவணம், உடையார் ஸ்ரீபுகலூர் தேவர் மத்யான்னசந்தி அமுதுசெய்தருளும்போது உத்தமாத்ரமாநம்........லோகமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து வரகூர்நம்பியார்குளத்தின் தெற்குக்கரையிலே நித்தம் 12 பிராமணர் உண்பதாக ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துப் பேரூர்நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங்கிழான் அற்புதக்கருவுணையகரான களப்பாள

ராஜர் செய்வித்தசாசனம்...........* என்பதனால் நன்குபுலப்படும். ஜயங்கொண்டசோழமண்டலம் என்பது ராஜராஜனைஉள்ளிட்ட மத்தியகாலச்சோழவரசர்கள் பல்லவராஜ்யத்தை வேரறக்களைந்து பிடித்துக்கொண்ட தொண்டைநாட்டிற்குப்பெயரெனச் சரித்திரவாசிரியர்களாற் கூறப்பட்டிருக்கிறது. தொண்டைநாடானது 24 கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அதனில், புலியூர் என்பது 2-வது கோட்டமாகும். முதற்கோட்டம் புழல். மேலேகூறிய வாணன் என்பது அரசனெனப் பொருள்படுமென்றதற்கேற்றவாறே இச்சாஸனத்திலும் களப்பாளராஜரென்றார்.

இவர் பெரிய கொடைவள்ளலாகவிளங்கியவரென்று தெரிகிறது. தனது ஊர், வீடுமுதலியவற்றைப் பாவலர்க்கீந்ததன்றித் தன்னையும் அடிமையாகத்தந்து பின்னர் அவ்வித்துவானால் அடிமையினின்றும் நீக்கப்பட்டுத் திருப்புகலூரையடைந்து "இம்மையேதரும்சோறும் கூறையுமேற்கலாம்இடர்கெடலுமாம் அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லை" என்று வாகீசப்பெருமானால் துதிக்கப்பெற்ற சரண்யபுரவாசனான சின்மயனைத்துதித்துவாழ்ந்தனர்போலும்.

பன்னுந் தமிழ்க்கவன் மாமனையாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாணமுதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன்பேர்நிறுத்த
மன்னுந் தமிழு முரைத்தா னவன்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

கற்குங் கவிவல்லை யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போ
னெற்குன் றமுநம் மரபுமெந் நாளு நிலைநிற்கவே.

என்னும் பாக்களால் இவர் யாதவர்கோனான நம்பி காளிக்குத் தம்மையுள்பட அடிமையாக்கிக்கொண்டனரென்றால் இவரது கல்வியறிவும், வள்ளன்மையும் மற்றொருமுறையும் சொல்லவேண்டுமோ.

மேலேகூறிய ஆதாரங்களைக்கொண்டு புகலூரந்தாதியியற்றியவர் இயற்பெயர் களப்பாளரென்பதும், நெற்குன்றமவரது ஊரென்பதும் ஒருவாறு துணியலாம்.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

---

* செந்தமிழ், தொகுதி XII பக்கம் 268.

# கோச்செங்கணான் காலமெது ?

செந்தமிழ் 12ம்தொகுதியின் 173ம்பக்கத்திற்றொடங்கிய (ம-ா-ா-ஸ்ரீ ஸதாசிவப்பண்டாரத்தாரவர்கள் எழுதியுள்ள) வியாசத்தில் 177-ம் பக்கத்திலே "ஆனாற் செங்கணான், கி.பி. முதல்நூற்றாண்டிலிருந்த சோழன் கரிகாலனுக்குப்பிந்தியவனென்பது யாவரு மறிந்தவிஷயம்" என்று கூறியிருக்கிறது. அவர் இன்னஆதாரத்தின்மீது இவ்வளவுநிச்சயமாய்க் கூறியிருக்கிறாரென்பது தெரியவில்லை.

கலிங்கத்துப்பரணியிற் கரிகாலனுக்குமுந்தியவனாகக் கோச்செங்கணானைச் சொல்லியிருக்கிறது. Dr. ஹூல்ஷ்துரையவர்கள் பிரசித்தஞ்செய்திருக்கிற 'தென்னிந்தியாசிலாசாஸனங்கள்' என்னும் புத்தகவரிசையில் 2வதுதொகுதி 2வதுபகுதியில் 153வதுபக்கத்தில், தமக்குக்கிடைத்த தாமிரசாஸனம் சிலாசாஸனம்முதலியவைகளுள் ஒன்றிற் கோக்கிள்ளி, கோச்செங்கணான், கரிகாலனென்னும்வரிசையும், மற்றொன்றில்கோக்கிள்ளிகரிகாலன்கோச்செங்கணானென்னும்வரிசையும், வேறொன்றில் கரிகாலன் கோச்செங்கணான் கோக்கிள்ளியென்னும் வரிசையுங் கொடுத்திருப்பதால் உண்மையில் யார்முந்தியவர் யார்பிந்தியவரென்று சொல்லமுடியவில்லையென்று அவர் சொல்லியிருக்கிறார்.

இதுநிற்க, கடைச்சங்கப்புலவர்பெருமானாய நக்கீரனார்செய்த பல பிரபந்தங்கள் பதினோராந்திருமுறையின் ஒருபாகமாக அமைக்கப்பட்டிருக்கின்றனவென்பதும் அது சைவர்கள்எல்லாராலும் நிஸ்ஸந்தேகமாய்ப் பல்நூற்றாண்டுகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுவந்திருக்கிறதென்பதும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே. அந்தப்பிரபந்தங்களுள் 'கோபப்பிரஸாதம்'என்பது மொன்று. அதிற் சிவபெருமானை அவர் பலவகையாய்த் தோத்திரஞ்செய்பவர், "சீர்மலி சிலந்திக் கின்னர சளித்தும்" என்றும் தோத்தரித்திருக்கின்றனர். சிலந்தி சிவபெருமானுக்கு வழிபாடுசெய்ததும் அச்சிலந்தியைச் சோழர்குலத்திற் கோச்செங்கணானாய்ப்பிறக்கும்படி அவர் கிருபைசெய்ததும் திருவானைக்காப்

புராணத்துள் கஜாரணியப்படலத்திலும், பெரியபுராணத்துட் கோச்செங்கட்சோழநாயனார்புராணத்திலும் பரக்கக்காணலாம்.

நக்கீரனார் பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் முதலானவர்களதுகாலத்திலிருந்தவரென்பதை நெடுநல்வாடைமுதலிய அவர்செய்யுட்களா லறியலாம்.

மேற்கூறிய நெடுநல்வாடையை நக்கீரனார்பாடுவதற்குக்காரணமாயிருந்த நெடுஞ்செழியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனுடைய பேரன்தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனாயிருப்பினும் சோழன்கரிகாலனுக்கும் அவனுக்கும் இடையேயுள்ளகாலம் மிகச்சொற்பமேயாம். சோழன்கரிகாலனுக்குப்பின் சோழன்நெடுங்கிள்ளி புகாரில் ஆட்சிபுரிந்தது மணிமேகலைமுதலியவற்றால், தெளிவாய்விளங்கும். நெடுங்கிள்ளியின்காலத்திலேயே புகாரைக் கடல்கொண்டது. அவன்மகன் தொண்டைமானிளந்திரையன் காஞ்சியில் ஆட்சிபுரிந்தது பெரும்பாணாற்றுப்படையால் தெள்ளிதில்விளங்கும். பிரஸ்தாபகாலத்தில் உறையூரிற் சோழன்பெருநற்கிள்ளியிருந்ததாகவும்தெரிகிறது. கோச்செங்கணான் அக்காலத்திலிருந்தானென்றுகூறுவதற்குக் கொஞ்சமேனு மிடமில்லை.

இதைக்கவனிக்கும்போது கோச்செங்கணான் கரிகாலனுக்குமுந்தியவனென்று ஒருதலையான முடிவுக்குவரக்கூடியதாயிருக்கிறதென்று தோன்றுகிறது. ஒருகால் எனதபிப்பிராயம் பிசகாயிருக்கும்பக்ஷத்தில் அதைப்பத்திராசிரியரவர்களாவது பண்டாரத்தாரவர்களாவது திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கரிகாலனுக்குப்பிந்திச் சோழர்கள் நால்வர் முறையே அரசாண்டதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அந்நால்வருடையபெயர்களையும் அவர்கள் செந்தமிழ்வாயிலாய் வெளிப்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரி.

# வண்டின் ஒலி.

நன்னூல்விருத்தியுரைகாரர், "அகமுனர்ச் செவிகை வரினிடையனகெடும்" (உஉஉ) என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையில், அகம்+சிறைத்தும்பி—அஞ்சிறைத்தும்பி என்று ஆகும் எனக்குறித்து, அகஞ்சிறை—'ஏனையவற்றின்சிறைபோலப் புறத்தின்கண்ணவன்றி அகத்தின்கண்ண' என விளக்கினர்.

தும்பி—வண்டுகளில் ஒருசாதி. இங்கே ஒழிந்த வண்டினங்களையுங் குறிக்கும். "அஞ்சிறைவண்டினரிக்கணம்" என்பது திருமுருகாற்றுப்படை.

எனவே, வண்டுகளுக்குப் புறத்தேஇரண்டு அகத்தேஇரண்டு ஆக நான்குசிறைகள் உண்டு என்பது கூறப்பட்டது.

அச்சிறைகளுள், புறச்சிறைகள்இரண்டும் பறத்தற்குக் கருவியாக உள்ளன என்பது வெளிப்படை. அகச்சிறை இரண்டின்பயன் யாதென ஆயும்போது, அவை ஒலித்தற்குக் கருவியாகக் காணப்பட்டன.

வண்டுகள் வாளாவிருக்கும்போழ்து ஒலியாதிருத்தலும், பறக்கும்போழ்தே ஒலித்தலும், அவ்வொலியும் புறச்சிறைகள்மட்டுமே உடையவற்றிற்கு இன்மையும் காண்க.

நன்னூலார் உடம்பின் உள்ளகத்திருந்து எழும்ஒலி நிறையுயிர் முயற்சியாலேதோன்றும் என்றார். "நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப, எழுமணுத்திரள்" (எச). நிறையுயிர்—நிறைந்த அறிவினையுடையவுயிர். நிறைந்தஅறிவு—ஐயறிவும் ஆறறிவும். வண்டு—நாலறிவுயிர். நிறைந்தவுயிரன்று. "ஆற்ற லுடையுயிர் முயற்சியி னணுவியைந், தேற்றனவொலி" என்பது அவிநயம். 'உந்திமுதலா முந்துவளி' என்பது தொல்காப்பியம். உந்தி வண்டுகட்கு உண்டென உரைத்தற்கில்லை. ஐயறிவுயிர்கட்கு உண்டென்ப.

இவற்றால், வண்டுகளின் ஒலி அகத்தேதோன்றி வாய்வழியாக வரும் என்பதின்றி அவற்றிற்குச் சிறப்பாக அமைந்த அகச்சிறைகளால் தோன்றும் என்பது கூறப்பட்டது. ஆயின், "மல்லிகையே வெண்சங்கா வண்டூத," "நாற்ற நாட்டத் தறுகாற் பறவை சிறுவெள்ளாம்பன் ஞாங்க ரூதும்" (புறம் எ0) "வரிவண்டு............நறுமுல்லைப் பாய்ந்தூதி" (கலி கூகா) என வருவனவெல்லாங் ரவிமரபெனக்கொள்க.

R. வேங்கடாசலம்பிள்ளை,

மோகனூர்.

ஸ்ரீ:

# பிழை திருத்தல்.

——(o)——

(1) சென்ற ஆடிமாசச்செந்தமிழிலே ௩௩௯-ம் பக்கத்திலே ௨௮-ம் வரியிலே "மூங்கிலாலாயவேலி என்றவன்" என்புழி "என்றவன்" என்பதை என்றவர் எனப்படிக்க.

(2) ௸ ௩௫௪-ம் பக்கம் ௩௩-ம் வரியில் இப்பொருப்பினை என்றிருப்பதை இப்பொறுப்பினை எனத் திருத்திக்கொள்க.

---

# புத்தகமதிப்புரை.

——(:o:)——

1. செல்வவிருத்திவிளக்கம்:-இது, தி. சே. சுப்பிரமணிய ஐயரவர்களாற் செல்வவிருத்திக்குரிய காரணங்களை விளக்கித் தெளிவான தமிழ் நடையிலெழுதப்பட்டது. இதில் முதற்பாகத்திற் செல்வ வளர்ச்சியைப்பற்றிக் கதாரூபமாகக்காட்டி, பிறகு செல்வத்தின் உற்பத்தியையும், பண்டமாற்றையும், செல்வத்தின் வகைநிலைகளையும் யாரும் தெளிவாயுணரும்படி எழுதி, அவற்றிற்கேற்ற படங்களும் அட்டவணைகளும் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இப்புத்தகம் இக்காலத்திற் சாதாரண ஜனங்களின் அறிவுவளர்ச்சிக்கும் தொழில்விருத்திக்கும் உதவியாயிருப்பதுபற்றிப் பாராட்டற்பாலதே.

---

2. உபதேசரத்நம்:— இது, முஹம்மத்நபீ அவர்களின் உபதேசங்களை அறபீ, பார்ஸி, உர்தூ முதலிய பாஷைகளிலுள்ள இஸ்லாமிய மதநூல்களிலிருந்து ஏர்வாடி மௌலவிமுகம்மத் ஷாஹ் ஆதம் அவர்களின் சிஷ்யரான M. A. மலிக்சாஹிப் அவர்களால் தமிழில் திரட்டி எழுதப்பட்டது. இதில் இஸ்லாமிய மதவிஷயமான வரலாறுகளும் பிரசங்கங்களும் ஒழுக்க வழக்கங்களைப்பற்றிய உபதேச வாக்கியங்களும் படிப்பவர்மனதை நல்வழிப்படுத்தும்படி நன்கு எழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணு 10.

---

3. சத்யஹரிச்சந்திரன்:—இது, முடிகொண்டான் பிரஹ்மஸ்ரீ பண்டிட் M. M. நாராயணஸாமி ஐயரவர்களால் படிப்பவர் விருப்புறுமாறு நன்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆறங்கங்களுடையது. இதன் விலை அணு 6.

பத்திராதிபர்.

---